# வக்ஃபே ஜதீதின் 58 வது
# அருளுக்குரிய ஆண்டு அறிவிப்பு

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது
கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா
பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள்

Book Name : 58 th Blessed Announcement of Waqf-e-Jadid

Khutba Jumu'a : Hadhrat Khaliftul Masih V

Translated By :

Moulavi. M. Rafeeq Ahmed Sb.

Moulavi. Abdul Muneef Sb.

Copies : 1500

Year : 2015

Published By : Nazamat Waqf-e-Jadid

Sponsered By : Nazarat Nashr-o-Ishaat

## வக்ஃபே ஜதீது பிற சந்தாக்களை உறுதிப்படுவத்துவதற்கான வழியாகும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

வக்ஃபே ஜதீதின் இந்த சந்தாவில் இவ்வளவு தொகை தான் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது. இதில் ஏழை எழியவர் கூட தன் தகுதிக்கேற்ப பங்கெடுக்கலாம். பொருள் தியாகம் செய்தால் அதனால் துஆக்களையும் பெறுவீர்கள். வானவர்களின் துஆக்கைளயும் பெறுவீர்கள். மேலும் இறைவனின் விருப்பத்தையும் பெற்றுக் கொண்டிருப்பீர்கள்.... புதிய அஹ்மதிகளும் தொடக்கத்திலிருந்தே இந்த பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். சிறிய தியாகம் செய்து வக்ஃபே ஜதீதில் இணைண வேண்டும். பிறகு பொருள் தியாகம் செய்கின்ற இந்த பழக்கம் வளர்ந்து கொண்டே செல்லும். இவ்வாறு தமக்குத் தாமே பொருள் தியாகம் செய்வதற்கான பழக்கத்தை அவர் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் காரணமாக பொருள் தியாகம் செய்தவற்கான நல்வாய்ப்பும் வளர்ந்து கொண்டே செல்லும்.

வக்ஃபே ஜதீத் சந்தாவை துவக்கிய ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

வக்ஃபே ஜதீத் என்ற இந்த சந்தா எவ்வளவு உறுதியாகுமோ அல்லாஹ்வின் அருளால் அதே அளவு சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மற்றும் தஹ்ரீகே ஜதீத் சந்தாக்களிலும் வளர்ச்சி ஏற்படும்.

(6.1.2006 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரை, குத்பாத்தே வக்ஃபே ஜதீத் என்ற நூலின் 575 ஆம் பக்கம்)

## வக்ஃபே ஜதீதின் 58 வது அருளுக்குரிய ஆண்டு அறிவிப்பு

■ கடந்த வருடம் ஜமாஅத்திற்கு வக்ஃபே ஜதீதில் 62 இலட்சத்து 9 ஆயிரம் பவுண்டு தியாகம் செய்வதற்கு நல்வாய்ப்பு கிடைத்தது.

■ உலகத்தின் பல்வேறு நாடுகள் செய்த பொருள் தியாகம் தொடர்பாக ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் சம்பவங்கள்

■ வக்ஃபே ஜதீதில் பொருள் தியாகம் செய்வதில் இந்தியாவிற்கு ஆறாம் இடம்.

■ உலகின் பால்வேறு நாடுகள் வக்ஃபே ஜதீதில் செய்த பொருள் தியாகத்தின் மீது ஒரு கண்ணோட்டம்.

■ வசூலின் அடிப்படையில் இந்திய மாநிலங்களில் முதல் பத்து இடங்களை வகிக்கும் ஜமாஅத்துகள் கீழே வழங்கப்படுகின்றன.

■ கேரளா முதலிடம், ஜம்மு காஷ்மீர், தமிழ் நாடு, ஆந்திரம், மேற்கு வங்களாம், ஒரிஸா, கர்நாடகம், காதியான், பஞ்சாப், உத்திர பிரதேசம், மாகராஷ்டரா. பிறகு இறுதியில் மூன்று மாநிலங்கள் வருகின்றன. அவை பிஹார், இலட்சத் தீவு மற்றும் ராஜஸ்தான்.

வசூல் அடிப்படையில் முன்னிலையிலுள்ள இந்தியாவின் ஜமாஅத்துகள்:

கருளாயி, கோழிக்கோடு, ஹைதராபாத், கோல்கத்தா, காதியான், கண்ணுர் டவுன், சூலூர், பயங்காடி, சென்னை, பெங்களூர். இறுதியில் கருநாகப்பள்ள, பத்தப்பிரியம் மற்றும் கேரங் ஆகிய மூன்று ஜமாஅத்துகள் வருகின்றன.

உங்களால் இயன்றவரை நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி, செவிசாய்த்துக் கீழ்ப்படிந்து (அவனது வழியில்) செலவு செய்யுங்கள். இது உங்களுக்கே மிக நல்லதாகும். தங்கள் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து காப்பாற்றப்படுபவர்களே வெற்றி பெறுபவர்களாவர்.

நீங்கள் அல்லாஹ்வுக்கு அழகிய கடனாக கடன் கொடுத்தால், அவன் அதனை உங்களுக்கு பன்மடங்காக்கித் தருவதுடன் உங்களை மன்னித்தருள்வான். அல்லாஹ் மிக்க மதிப்பளிப்பவனும், சகித்துக் கொள்பவனுமாவான். **(64:17–18)**

இந்த வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் அவர்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சி இறை கட்டளைகளுக்கு முற்றிலும் முழுமையாகக் கட்டுப்பட்டு நடந்து நிறைவேற்றுமாறு கவனமூட்டுகின்றான். அல்லாஹ்வின் எண்ணற்ற கட்டளைகளில் ஒரு முக்கியமான கட்டளை இறைவனின் வழியில் செலவு செய்வதாகும். எனவே, நம்பிக்கையாளர்கள் பொருள் தியாகத்தின்போது ஒருபோதும் தயக்கத்துடனும் சலனத்துடனும் செயல்படக்கூடாது. ஏனென்றால், நம்பிக்கையாளர்கள் செய்கின்ற இந்த பொருள் தியாகம் ஒரு நல்ல நோக்கத்திற்காக செய்யப்படுகின்றது. இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்துதான் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவனுக்காக நல்ல நோக்கங்களில் முன்னேறிச் செல்வதற்காக செலவு செய்கின்றது. மேலும் செலவு செய்வதற்கு அது விரும்புகின்றது. இஸ்லாத்தின் தப்லீகிற்காகவும், கொள்கை பரப்புநர்களை தயார் செய்வதற்கும், அவர்களை செயற்களத்தில் அனுப்பி வைப்பதற்கும், பிரசுரங்களை வெளியிடுவதற்கும்,

திருக்குர்ஆனை வெளியிடுவதற்கும், பள்ளிவாயில்களைக் கட்டுவதற்கும், பிரச்சார நிலையங்களை கட்டுவதற்கும், பள்ளிக்கூடங்களை நிறுவுவதற்கும், பல்வேறு நாடுகளில் வானொலி நிலையங்களை ஆரம்பிப்பதற்கும், அதன் மூலம் மார்க்க போதனைகளைப் பரப்புவதற்கும், மருத்துவமனைகளை நிறுவுவதற்கும், மனிதர்களுக்கு தொண்டு செய்கின்ற மற்ற பணிகளைச் செய்வதற்கும், சுருக்கமாக சொல்வதென்றால் இதுபோன்ற பல்வேறு வகையிலான பணிகளைச் செய்வதும் ஆகிய இவையெல்லாம் அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுவதுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன.

இவற்றை இன்று உலகின் வரைபடத்தில் உண்மையான இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே செய்கின்றது. ஏனென்றால் நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு இந்த பணிகளின் ஆன்மாவை புரிந்திருக்கின்றோம். நாம் உள்ளத்தின் கருமித்தனத்திலிருந்து தப்பித்தவாறு முஃப்லிஹீன் – அதாவது வெற்றி பெற்ற அந்த மக்களுடன் இணைந்து விடுகின்ற அறிவைப் பெற்றுள்ளோம். வெற்றி என்பது மட்டும் இதற்கு பொருளல்ல. இதன் கருத்து என்னவென்றால், அந்த மக்கள் விரிவான நிலையை அடைவர். வெற்றிகளை விடவும் மிகவும் அதிகமான விரிவான நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விடும். எவர்கள் இத்தகைய விரிவான நிலையையும் வெற்றிகளையும் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனரோ, தங்களது நல்ல ஆசைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்கின்றனரோ அத்தகைய மக்களே மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைப் பெறுவதற்கு விருப்பப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர். அத்தகைய மகிழ்ச்சிகரமான வாழ்க்கை இறைவனின் திருப்திக்காக இருக்கின்றது. இத்தகையவர்களது வாழ்க்கை இறைவனின் பாதுகாப்பின்கீழ் வந்து விடுகின்றது. இவர்களது செழிப்பான நிலை நிரந்தரமாக இருக்கக்கூடியதாகும். அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நிம்மதியைப் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனர். இந்த உலகிலும் மறுமை வாழ்க்கையிலும் அவர்கள் மீது அல்லாஹ்வின் அருள் எப்போதும் இறங்கிக் கொண்டேயிருக்கும். எனவே, எவர்கள் இறைவனிடமிருந்து வெற்றிகளைப் பெறுகின்றனரோ அவர்களது வெற்றிகள் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டவையாக இருக்காது. மாறாக, நாம் கூறியது போன்றே இந்த வெற்றிகளுக்கு எல்லையற்ற விரிவான நிலை இருக்கும். எனவே, இந்த வகையான வெற்றிகளைப் பெறுகின்ற மக்கள் எவ்வளவு நற்பாக்கியம் உடையவர்களாக இருக்கின்றனர்!

அல்லாஹ் இறைவனது வழியில் செலவு செய்பவர்களைப் பற்றி

அவர்களிடம், செலவு செய்ய வேண்டும் என்று மட்டும் கோரவில்லை. மாறாக, இந்த செலவானது செலவு செய்பவர்களின் முன்னேற்றத்திற்கான ஒரு வழியாகும் என்று கூறுகின்றான். இறைவன் கடன் வைக்க மாட்டான். உங்களது பொருள் தியாகத்தை அல்லாஹ் எந்த அளவு அன்பான பார்வையுடன் பார்க்கின்றான் என்றால், மேலும் அவற்றிற்கு எந்த அளவு மதிப்பளிக்கின்றான் என்றால் அது நீங்கள் இறைவனுக்கு அழகிய கடன் கொடுத்தற்கு ஒத்ததாக ஆகிவிடுகின்றது. கடனை திருப்பிக் கொடுக்கின்ற நேரம் வரும்போது இறைவன் அதனை பன்மடங்காக்கித் தருகின்றான். இது மட்டுமல்ல. மாறாக, அல்லாஹ் கூறுகின்றான்: உங்களது இந்த தியாகத்தின் காரணமாக அல்லாஹ் உங்களது பாவங்களை மன்னித்து விடுவான். உங்களது பாவங்களை மட்டும் மன்னிக்க மாட்டான். மாறாக, மேலும் நன்மைகளைச் செய்வதற்கான நல்வாய்ப்பை உங்களுக்கு வழங்குவான். எனவே, அல்லாஹ் உங்களுக்கு எந்த அளவுக்கு மதிப்பளிக்கின்றான் என்பதை நீங்கள் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. இந்த மதிப்பளித்தல் தொடர்பான விளக்கம் முஃப்லிஹீன் என்ற சொல்லிற்கான விளக்கத்தில் கூறப்பட்டது. எனவே, அல்லாஹ்வின் அருள்களிலிருந்து இவ்வாறு அருளைப் பெறுகின்ற அந்த மக்கள் எந்த அளவு நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்றனர்!

நான் ஏற்கனவே கூறியது போன்று இன்று இந்த உலகில் அஹ்மதிகளுக்கு தான் இறைவனது வழியில் செலவு செய்வதற்கான அறிவு இருக்கின்றது. இதன் காரணமாக அஹ்மதிகள்தான் இந்த அருள்களிலிருந்து பலனடைகின்றனர். இது நாவளவில் மட்டும் கூறப்படும் விஷயங்கள் அல்ல. இத்தகைய நூற்றுக்கணக்கான இன்னும் சொல்வதென்றால் ஆயிரக்கணக்கான உதாரணங்கள் இருக்கின்றன. அவை அவ்வப்போது என் முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. எந்த மக்கள் பொருள் தியாகம் செய்கின்றனரோ அதனை அவர்கள் எனக்கு எடுத்துக் கூறுகின்றனர். அது பற்றி எனக்கு எழுதுகின்றனர். அவர்கள் ஒரு துடிப்புடன் இந்த தியாகங்களைச் செய்கின்றனர். பொருள் தியாகம் பற்றி அல்லது இறைவனது வழியில் செலவு செய்வது பற்றி ஒருவருக்கு சரியான அறிவு இல்லாமல் இருந்தால் பிறகு துடிப்புடன் இதுபோன்ற தியாகங்களை யார் செய்ய முடியும்? இது மட்டுமல்ல. இவ்வாறும் பலர் உள்ளனர். அவர்கள் இந்த பொருள் தியாகத்தை செய்த பிறகு உடனடியாக இந்த அனுபவத்தையும் கடந்து வருகின்றனர். அதாவது அல்லாஹ் அவர்களுக்கு எந்த அளவு பன்மடங்காக பெருக்கி அதனை திருப்பித் தருகின்றான் என்பதை அவர்கள் பார்க்கின்றனர். பிறகு அல்லாஹ் அவர்களுடன்

இந்த அளவு அன்பாக நடந்து கொள்வது அவர்கள் மீது எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றால் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் பெருகிய அந்த செல்வத்தை மீண்டும் அல்லாஹ்வின் வழியிலேயே செலவு செய்து விடுகின்றனர். இவ்வாறு பொருளாதார ரீதியாகவும் அவர்கள் அருள்களைப் பெறுபவர்களாக ஆகிக் கொண்டே செல்கின்றனர். மற்ற அருள்களும் அவர்களுக்கு கிடைத்துக் கொண்டே இருக்கின்றது. அத்தகைய பல சம்பவங்கள் உள்ளன. மிகவும் உணர்வுடன் அஹ்மதிகள் அவற்றை எடுத்துக் கூறுகின்றனர். அல்லாஹ் அவர்கள் மீது எவ்வாறு அருள் செய்தான்? எவ்வாறு அவர்களுக்கு தியாகங்கள் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. அவர்களது எதிர்பார்ப்புகளை விடவும் அதிகமாக எவ்வாறு அவர்கள் அல்லாஹ்வின் அருள்களில் பங்கு பெறுபவர்களாக ஆகிவிட்டனர்? என்பதை அவர்கள் கூறுகின்றனர். அப்படிப்பட்ட சில சம்பவங்களை நான் எடுத்துக் கூறுவேன்.

பெனினிலிருந்து நமது ஜமாஅத்தின் முபல்லிக் அவர்கள் எழுதுகின்றார்கள்:

கோத்தோனோ என்ற நகரத்தில் வயது முதிர்ந்த அஹ்மதியான ஸல்மான் சாஹிப் இருந்தார். பொருளாதார ரீதியாக மிகவும் பலவீனமானவராக இருந்தார். பெனினில் டிசம்பர் மாதம் நடைபெறும் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்கும் வந்து போவதற்குமான பயணச் செலவு 1500 ஸிஃபாவை கொடுப்பதற்கான வசதி கூட அவர்களிடம் இல்லை. மாநாட்டில் கலந்து கொள்ளும்படி அவரிடம் கூறப்பட்ட போது, அதுபற்றி வலியுறுத்திக் கூறப்பட்ட போது எப்படியோ அவர் முயற்சி செய்து ஒரு தரப்பிற்கான தொகையையும் செலவு செய்தவாறு மாநாட்டிற்கு வந்து சேர்ந்தார். ஆனால், திரும்பிச் செல்வதற்கான செலவிற்கு அவரிடம் தொகை இருக்கவில்லை. அதற்கான ஏற்பாடு செய்ய வேண்டியது வந்தது. மாநாட்டிலிருந்து திரும்பி அவர் வீட்டிற்கு வந்தார். நான்கு அல்லது ஐந்து நாட்கள் கழிந்த பிறகு வக்ஃபே ஜதீத் சந்தா வசூல் செய்பவர்கள் அவரிடம் சென்றனர். அவர்கள், நீங்கள் வக்ஃபே ஜதீதில் சந்தா கொடுப்பதற்கு வாக்குறுதியாக கூறிய தொகையை இன்னும் செலுத்தவில்லை என்று கூறினார்கள். சுலைமான் சாஹிப் தனது வீட்டில் அவர்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். வக்ஃபே ஜதித் சந்தா தொடர்பான விஷயங்களைக் கேட்டு விட்டு வீட்டிற்குள் சென்றார்கள். 6000 ஃபிராங்க் ஸிஃபாவை கொண்டு வந்து கொடுத்தார்கள்.

எழுதுகின்றவர் எழுதுகின்றார்: அவரது தகுதிக்கேற்ப பார்க்கின்ற போது இது மிகப்பெரும் தொகையாகும். வசூல் செய்ய வந்த ராஜி ஷஹீது சாஹிப் அவர்கள் முதலில் உணர்ச்சிவசப்பட்டார்கள். பிறகு அவரிடம் நீங்கள்

குறைவான தொகையை தாருங்கள். இவ்வளவு பெரிய தொகையை தரவேண்டாம். உங்களது பிள்ளைகளுக்காக கொஞ்சம் வைத்து கொள்ளுங்கள். இது உங்களது தகுதிக்கு அதிகமான தொகையாகும் என்று கூறினார். அதற்கு அவர் இறைவன் எனக்கு இந்த தொகையை தந்திருக்கும்போது நான் அவனது வழியில் இதை ஏன் கொடுக்கக் கூடாது? இது எனது தொகையல்ல. அல்லாஹ்வின் அமானத் ஆகும். என்னிடம் மாநாட்டிற்கு போவதற்கு எந்தத் தொகையும் இருக்கவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு ஒரு தரப்பிற்கான பயணத் தொகையை செலவு செய்தவாறு நான் சென்றேன். திரும்பி வரும் போது அல்லாஹ் எந்த அளவு வழங்கியுள்ளான் என்றால் நான் மகிழ்ச்சியுடன் இந்த தொகையை அவனது வழியில் கொடுக்கத் தயாராக இருக்கின்றேன் என்று அவர் பதில் கூறினார். மேலும் அவர் இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் வாருங்கள். மீண்டும் நான் இன்னும் கூடுதலாக தொகையை தருவேன் என்று கூறினார். இரண்டு நாட்களுக்குப் பிறகு மேலும் 2000 ஃபிராங்க் ஸிஃபாவை அவர் வழங்கினார்.

பிறகு தன்ஸானியாவிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

அஹ்மது மனபோஸே சாஹிப் அவர்கள் அங்குள்ள ஒரு மண்டலத்தில் புதிதாக பைஅத் செய்தவராவார். இரண்டு வருடங்களுக்கு முன்னால் அவர் அஹ்மதி ஆனார். அவர் மீண்டும் மீண்டும் இந்த விஷயத்தை கூறி வந்தார். அவர் கூறினார். நான் பார்த்துள்ளேன். நாம் எந்த தொகையை வக்ஃபே ஜதீதிலும் தஹ்ரீகே ஜதீதிலும் சந்தாவாக கொடுத்தாலும் அல்லாஹ் அதனை அதிகமாக்கி எங்களுக்கு திருப்பித் தருகின்றான். ஜமாஅத்தில் இணைவதற்கு முன்னால் எங்களுக்கு பைசா எங்கே போகின்றது? என்பது தெரியாமல் இருந்தது. ஆனால் ஜமாஅத்தில் இணைந்து எப்போது நான் சந்தா கொடுக்க ஆரம்பித்தேனோ அப்போதிருந்தே எனது உள்ளத்திற்கு நிம்மதி கிடைத்தது. பொருளாதார நிலைமையும் மிகவும் சிறந்து விளங்கியது.

பிறகு புரூண்டியிலிருந்து நமது ஜமாஅத்தின் முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

அங்கு மிகவும் ஏழையான புதிய அஹ்மதியான அபூபக்கர் சாஹிப் அவர்கள் இருந்தார்கள். மிகவும் சாதாரண சம்பளத் தொகையில் தமது வாழ்வை இவர் கழித்து வந்தார். தமது பெற்றோர்களுக்கும் இவர் உதவி செய்து வந்தார். முபல்லிக் சாஹிப் கூறுகின்றார்: நான் இவரிடம் வக்ஃபே ஜதீத் சந்தாவை பெறுவதற்காக சென்ற போது உடனடியாக அவர் கொஞ்சம் தொகையை

வழங்கினார். மேலும் தனது தந்தையாரின் கால்களில் காயம் ஏற்பட்டதன் காரணமாக அவர்கள் மிக அதிகமாக நோய்வாய்ப்பட்டுள்ளார்கள். மருத்துவமனையில் போதுமான அளவு சிகிச்சையும் செய்யப்பட்டு விட்டது. நாட்டு மருந்து சிகிச்சையும் செய்யப்பட்டு விட்டது. இப்போது மருத்துவர்கள் அவர்களது கால்களை வெட்டி எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கூறி விட்டனர் என்று கூறினார்.

முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இரண்டு வாரம் கழிந்த பிறகு அபூபக்கர் சாஹிப் அவர்கள் ஜுமுஆவிற்கு வந்திருந்தார்கள். எல்லாவற்றையும் விட முதலாவதாக வக்ஃபே ஜதீது சந்தாவிற்கான தமது தொகையை அவர் செலுத்தினார். மிகவும் உருக்கமான சொற்களில் நன்றி தெரிவித்தவாறு வக்ஃபே ஜதீது சந்தாவில் சாதாரணமாக கொஞ்சம் தொகையை நான் முதலில் செலுத்தியிருந்தேன். அதனால் எனக்கு அருள் கிடைத்தது. அதாவது எங்கு நான் வேலை செய்து வந்தேனோ அங்கு எனது எஜமானர் எனது சம்பளத்தை உயர்த்தி விட்டார். அதைவிட அதிகமாக என் மீது ஏற்பட்டுள்ள அருள் என்னவென்றால் எனது தந்தையாரும் நலமடைய ஆரம்பித்தார். முதலில் அவர்கள் கைத்தடியின் உதவியுடன் நடந்தார்கள். இப்போது எதையும் பிடிக்காமல் அவர்கள் நடக்கின்றார்கள். இவை எல்லாம் சந்தா செலுத்தியதன் பரக்கத் ஆகும் என்று அவர் கூறுகின்றார். பிறகு எனது வருமானத்திற்கேற்ப நான் கொடுக்க வேண்டிய எனது கட்டாயச் சந்தாவின் கணக்கையும் கூறுங்கள். அதற்கேற்ப நான் முறையாக சந்தா கொடுக்க ஆரம்பித்து விடுவேன் என்றும் அவர் கூறினார்.

பிறகு தன்ஸானியாவின் லின்டி மண்டலத்திலிருந்து அங்குள்ள சுலைமான் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் கடை வைத்துள்ளேன். கடந்த வருடம் எனது வியாபாரத்தில் இழப்பு ஏற்பட்டது. ஆனால், தஹ்ரீகே ஜதீதிலும் வக்ஃபே ஜதீதிலும் நான் செய்திருந்த வாக்குறுதியில் குறைவு ஏற்பட நான் விடவில்லை. அருளுக்குரிய ரமலானில் எனது வாக்குறுதியை விட அதிகமாக நான் செலுத்தினேன். அதன் மூலம் கலீஃபத்துல் மஸீஹின் துஆவிலிருந்து பலன் பெறுபவனாக நான் ஆகிவிட வேண்டும். இந்த இழப்பிலிருந்து நான் வெளியேறி விட வேண்டும் என விரும்பினேன். இறைவன் எவ்வாறு அருள் செய்தான் என்றால் அந்த சமயத்தில் என்னிடம் ஒரு கடை இருந்தது. அதுவும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அல்லாஹ் எனது சந்தாவில் எந்த அளவு அருளை போட்டுள்ளான் என்றால் இப்போது எனக்கு இரண்டு கடைகள் உள்ளன என்று

அவர் கூறுகிறார். அல்லாஹ், நான் அவற்றை விட்டு வைப்பதில்லை. அதை பன்மடங்காகப் பெருக்கி திருப்பித் தருவேன் என்று கூறுகின்றான்.

பிறகு தன்ஸானியாவின் பட்வாரா மண்டலத்தைச் சார்ந்த ஒரு புதிய அஹ்மதியான சாங்க்வேஸீனபரி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் ஜமாஅத்தில் இணைந்தேன். பிறகு வெளியேறி விட்டேன். பிறகு உள்ளூர் முஅல்லிம் அவர்களின் முயற்சியின் காரணமாக மீண்டும் ஜமாஅத்தில் இணைந்தேன். ஜமாஅத்தில் அமைப்பை விட்டும் நான் வெளியில் இருந்த சமயத்தில் எனது வாழ்நாள் மிகவும் கஷ்டத்தில் கழிந்தது. ஒவ்வொரு நாளும் எனக்கு இழப்பு ஏற்பட்டது. என்னிடம் ஒரு சைக்கிள் இருந்தது. அதில் பாத்திரங்களை வைத்து அவற்றை விற்பதற்காக கொண்டு செல்வேன். சிறிய அளவில் வியாபாரம் செய்து வந்தேன். சில நேரம் முழு நாள் கழிந்த பிறகும் கூட எதுவும் விற்காமல் இருந்து வந்தது. ஆனால், எப்போதிருந்து ஜமாஅத் அமைப்பில் நான் இணைந்து விட்டேனோ அப்போதிருந்தே பல்வேறு திட்டங்களில் பங்கு பெற்று நான் சந்தா கொடுக்க ஆரம்பித்து விட்டேன். சிறிது காலம் கழிந்ததுமே எனது பொருளாதார நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. சந்தா கொடுத்ததால் அல்லாஹ் எந்த அளவு அருள்களை போட்டுள்ளான் என்றால் இப்போது நான் சைக்கிளிற்கு பதிலாக மோட்டார் சைக்கிள் வாங்கி விட்டேன். மேலும் எனது கடந்த கால நிலையை விட பல மடங்கு சிறந்த நிலையில் நான் இருக்கின்றேன் என்று அவர் கூறுகின்றார்.

பிறகு காங்கோ பராஸாவேயிலிருந்து நமது முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்:

ஓர் ஏழை அஹ்மதி நண்பரான அலீஃபா சாஹிப் அவர்கள் கூலி வேலை செய்து வந்தார். ஒவ்வொரு மாதமும் முறையாக சந்தா செலுத்தி வந்தார். நாங்கள் வக்ஃபே ஜதீது சந்தாவிற்கான அறிவிப்பை செய்ததும் அவர் கூறுகின்றார். என்னிடம் 2000 ஃபிராங்க் ஸிஃபா மட்டுமே இருந்தது. எங்கும் எனக்கு வேலையும் கிடைக்கவில்லை. நான் பள்ளிவாயிலுக்குச் சென்று இரண்டு ரக்அத் நஃபில் தொழுதேன். மேலும் என்னிடமிருந்த 2000 பிராங்க் ஸிஃபா தொகையை ஜமாஅத் தலைவரிடம் கொடுத்து விட்டேன். இவர் எழுதுகின்றார்: மாலையில் ஒரு நபர் எனக்கு 20,000 பிராங்க் ஸிஃபாவை அனுப்பி வைத்திருந்தார். நீண்ட காலத்திற்கு முன்பு நான் செய்த கூலி வேலைக்கான சம்பள தொகைதான் இது. அந்த சமயத்தில் அவர் இந்த தொகையை எனக்கு தரவில்லை. அவர் கூறுகின்றார்: சந்தா செலுத்தியதன் அருளால் அல்லாஹ் அந்த நபரை வற்புறுத்தி எனது தொகையை எனக்கு தரும்படி செய்துள்ளான். அதை பத்து மடங்கு அதிகமாக்கி அவன் திருப்பித் தந்துள்ளான்.

பிறகு பெனின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:

அங்குள்ள ஓர் அஹ்மதி இப்போது சில நாட்களுக்கு முன்பு தான் பைஅத் செய்திருந்தார். அத்துடன் சந்தாக்களையும் செலுத்த ஆரம்பித்தார். இவர் தன்னிடம் வழக்கத்திற்கு மாற்றமான மாற்றம் ஏற்பட்டுள்ளதை உணர்கின்றார். இவரிடம் இந்த வருடம் வக்ஃபே ஜதீத் சந்தா பெறப்பட்ட போது மிகவும் ஆர்வத்துடன் அதை வழங்கி விட்டு எப்போதிலிருந்து நான் சந்தா கொடுக்க ஆரம்பித்தேனோ அப்போதிருந்தே எனது வியாபாரம் அல்லாஹ்வின் அருளால் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கின்றது. எனது பணிகளில் வழக்கத்திற்கு மாற்றமாக அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. இவையெல்லாம் அஹ்மதிய்யத்தில் இணைந்தது மற்றும் சந்தா கொடுத்தது ஆகியவற்றின் பரக்கத்தேயாகும் என்று நான் கருதுகின்றேன் என்று கூறினார்.

பிறகு செராலியோனிலுள்ள கேன்மார் மண்டலத்தின் முபல்லிக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்:

அவர்கள் ஹாஜி ஷேக்கு சாஹிப் தொடர்பாக கூறுகின்றார்கள். அவர் கூறினார்: முதலில் நான் எனது பிள்ளைகளுக்காக நானே வக்ஃபே ஜதீது சந்தா கொடுத்து வந்தேன். ஆனால் இந்த முறை நான் எனது மகளிடம் அவள் தானே தனது வாக்குறுதியை எழுதட்டும் என்று கூறினேன். மேலும் அதனை தனது ஜேபிலிருந்தே அவள் செலுத்த வேண்டும் என்று கூறினேன். வக்ஃபே ஜதீது செயலர் இவர்களிடம் வாக்குறுதியைப் பெறுவதற்காக சென்றபோது டாக்டர் ஹாஜி ஷேக்கு சாஹிப் அவர்கள் தனது மகளிடம் உங்கள் வாக்குறுதியை எழுதுங்கள் என்று கூறினார். அதற்கு மகள் 10,000 லியூன் கொடுப்பதாக கூறினார். டாக்டர் சாஹிப் கூறுகின்றார்: ஒருவேளை அவள் 3000 அல்லது 4000 தான் எழுதுவாள் என்று நான் நினைத்தேன். மகள் 10,000 என்று கூறியதும் அவளது தாயார் இவ்வளவு பணத்தை எங்கிருந்து கொண்டு வந்து கொடுப்பாய்? என்று கேட்டார். டாக்டர் சாஹிப் தமது மனைவியிடம் அமைதியாக இருங்கள். அவள் தனது விருப்பத்திற்கேற்ப எழுதியுள்ளாள்; அவளை எழுத விடுங்கள் என்று கூறி அவரை தடுத்தார்கள். சில நாட்கள் கழிந்த பிறகும் டாக்டர் சாஹிபின் சில உறவினர்கள் அவர்களை சந்திக்க வந்தனர். அவர்கள் திரும்பும் போது டாக்டர் சாஹிபின் மகளுக்கு 15,000 லியூன் கொடுத்தனர். மகள் அப்போதே டாக்டர் சாஹிபிடம் 10,000 லியூன் கொடுத்து விட்டு இது நான் வாக்குறுதி அளித்திருந்த சந்தா தொகையாகும் என்று கூறினார்.

இந்த தொலைதூர பகுதிகளில் வசிக்கின்ற அஹ்மதிகளுக்கும், அஹ்மதிகளின் பிள்ளைகளுக்கும் அல்லாஹ் எல்லையற்ற கலப்பற்ற

மனத்தூய்மையை வழங்கியுள்ளான். அவர்கள் சந்தாவின் முக்கியத்துவத்தை புரிந்துள்ளனர். யார் இவர்களது உள்ளங்களில் இந்த தூண்டுதலை உருவாக்குகின்றார்? நிச்சயமாக இறைவனைத் தவிர வேறெவரும் இல்லை. பிறகும் கூட உலகின் குருடர்களுக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து அனுப்பப்பட்டவர்கள் என்பது தெரிவதில்லை. இதையும் நினைவில் கொள்ளுங்கள். புதிதாக வரக்கூடியவர்கள் கலப்பற்ற மனத்தூய்மையிலும் பற்றிலும் மிகவும் விரைவாக முன்னேறுகின்றனர். நன்மைகளில் முன்னேறுவதற்கான இந்த ஆன்மாவைப் பெறுவதன் பக்கம் பழைய அஹ்மதிகளும் பழைய அஹ்மதி குடும்பத்தைச் சார்ந்தவர்களும் கவனம் செலுத்த வேண்டும். மிகவும் கவலையுடன் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

பிறகு கென்ஷாஸாவின் நமது முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்:

அங்குள்ள ஒர் அஹ்மதி இப்ராஹீம் சாஹிப் அவர்கள் ஆடுகளை வாங்குவது விற்பது ஆகிய பணிகளைச் செய்து வந்தார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக இவர்களது வியாபாரத்தின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. அதில் எவ்வித இலாபமும் கிடைக்காமல் இருந்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்கள் தமது தகுதிக்கேற்ப சந்தா செலுத்த ஆரம்பித்தார். சந்தாவின் பரக்கத்தால் அவரது தொழில் நிலைமை சிறப்பானதாக ஆனது. அவர்கள் இவையெல்லாம் ஜமாஅத்தில் இணைந்த பிறகு, தான் செய்த பொருள் தியாகத்தின் விளைவுகளேயாகும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்.

காங்கோ கன்ஷாஸாவில் உள்ள பாகோங்கோ மாநிலத்திலிருந்து முபல்லிக் சாஹிப் அவர்கள் மேலும் எழுதுகின்றார்கள்:

முபான்ஸா கூங்கு என்ற ஜமாஅத்தைச் சேர்ந்த முஸ்தஃபா சாஹிப் அவர்கள் இந்த வருடம் ரமலானில் பைஅத் செய்தார். இந்த காலகட்டத்தில் கிறிஸ்தவராக இருந்த இவரது சகோதரி மிகவும் நோய்வாய்ப்பட்டார். ஒரு பெரும் தொகை அவரது சிகிச்சைக்காக செலவிடப்பட்டது. இதே மாதத்தில் பள்ளிவாயிலில் அவர் பொருள் தியாகத்தில் பங்கு பெற வேண்டும் என்ற அறிவிப்பை கேட்டதும் சந்தா கொடுத்தார். தனது சகோதரியின் சார்பாகவும் அவரது ஆரோக்கியத்திற்காக துஆ செய்தவாறு சந்தா கொடுத்தார். இதற்கு பிறகு இவரது சகோதரியும் உடல்நலம் அடைந்தார். இவையெல்லாம் இறைவனின் வழியில் செய்த பொருள் தியாகத்தின் அருளாகும் என்று இவரே கூறுகின்றார்.

மாலியின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:

அங்குள்ள முஹம்மது ஜாரா சாஹிப் என்றவோர் அஹ்மதி

ஜமாஅத்திலுள்ள சந்தாக்களை செலுத்துவதற்கு முன்னர் மிகவும் ஏழையாக இருந்தார். ஆனால், எப்போதிருந்து அவர்கள் ஜமாஅத்தின் சந்தாக்களை செலுத்த ஆரம்பித்தார்களோ அப்போதிருந்தே அவரது வறுமை விலக ஆரம்பித்தது. அல்லாஹ்வின் அருளால் மாலியில் இப்போது சில சகோதரர்கள் பெருமளவில் சிறப்பாக பொருள் தியாகம் செய்ய ஆரம்பித்துள்ளனர். சில நாட்களுக்கு முன்னர் ஓர் இளைஞரான தாவூது ஸாலிஹ் சாஹிப் அவர்கள் மிகவும் ஏழையாவார். மேஸ்திரியாக வேலை செய்தவர். இவர் ஆரம்பத்தில் ஒவ்வொரு வாரமும் 1000 ஃபிராங்க் ஸிஃபா சந்தாவாக கொடுக்க ஆரம்பித்தார். இவரது பணிகளிலும் கலப்பற்ற மனத்தூய்மையிலும் எந்த அளவு பரக்கத் ஏற்பட்டது என்றால் சில நாட்களுக்கு முன் அவர் ஒரு இலட்சத்தி 58 ஆயிரம் ஃபிராங்க் செலுத்தினார். இந்த தொகை 202 பவுண்டுக்கு சமமான தொகையாகும். இதனை சந்தாவாக அவர் கொடுத்துள்ளார். புதிதாக பைஅத் செய்பவர்களில் அல்லாஹ்வின் அருளால் சந்தாவின் பக்கம் கவனம் திரும்புவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மிகவும் தூய உள்ளத்துடன் அவர்கள் சந்தா கொடுக்கின்றனர். இவ்வாறே ஜமாஅத்தின் இன்னொரு தூய உள்ளம் கொண்ட அஃப்பானா சாஹிப் அவர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு இலட்சத்தி 50 ஆயிரம் ஃபிராங்க் அதாவது ஏறக்குயை 200 பவுண்டுக்கு சமமான தொகையை சந்தாவாக செலுத்தி வருகின்றார். இத்தகைய ஏழை நாடுகளில் இவை அனைத்தும் பெரும் தொகையாகும். இதை தவிர அவர்கள் 2 இலட்சத்தி 50 ஆயிரம் ஃபிராங்க் அதாவது ஏறக்குறைய 300 பவுண்டுக்கு சமமான தொகையை ஸக்காத் ஆக செலுத்தியுள்ளார். மேலும் அல்லாஹ்வின் அருளால் தனது ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேறியுள்ளார்.

இந்தியாவிலுள்ள காஷ்மீரின் இன்ஸ்பெக்டர் சாஹிப் எழுதுகின்றார்கள்:

கடந்த சில நாட்களுக்கு முன்னர் காஷ்மீர் மாநிலத்தில் வெள்ளம் வந்தபோது ஸ்ரீநகர் நகரத்திலுள்ள எல்லா அஹ்மதி வீடுகளும் பாதிப்பிற்குள்ளானது. செப்டம்பர் மாதத்தில் வந்த வெள்ளப்பெருக்கு எந்த அளவு இருந்தது என்றால் இரண்டு அடுக்கு மாடிக் கட்டடம் உள்ள வீடு வரை தண்ணீரில் மூழ்கி விட்டது. இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறுகின்றார்: நான் சுற்றுப் பயணத்தில் ஸ்ரீநகர் சென்ற போது இப்போது ஸ்ரீநகர் ஜமாஅத்தில் முழுமையாக நூறு சதவிகிதம் சந்தா வசூலாகாதே என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால் மக்கள் தங்களது வீடுகளிலுள்ள கூரைகளில் இருப்பதை தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாமல் இருந்தது. அவர்களது வீடுகள் முழுவதுமாக சேறு சகதி போன்றவற்றால் நிறைந்திருந்தது. முழு வீடும் மிகவும்

மோசமான நிலைமையில் இருந்தது. இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறுகின்றார்: எந்த வீட்டிற்குச் சென்றாலும் நான் சந்தா வசூல் செய்வதற்கு வந்துள்ளேன் என்று கூறுவதற்கான தைரியம் எனக்கு வரவில்லை. ஆனால், மக்கள் தாமாகவே என்னைப் பார்த்தவுடன் சந்தா தொடர்பாக என்னிடம் கேட்டனர். அதைக் கண்டு நான் வியப்படைந்தேன். மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பாக்கி இருந்த சந்தா தொகையை செலுத்தினர். இவ்வாறே துன்பங்கள் இருந்தும் கூட இவர்களது முகங்களில் எந்த மாற்றத்தையும் பார்க்க முடியவில்லை. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தே அஹ்மதிய்யா ஸ்ரீநகரின் பட்ஜெட் முழுமையாக வசூலாகி விட்டது.

இந்த காட்சியைப் பார்த்து கண்களில் நீர் ததும்புகின்றது. ரஸூலே கரீம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ரிழ்வானுல்லாஹி அலைஹிமின் நினைவு வந்தது. அவர்களிடம் சாப்பிடுவதற்கு எதுவும் இருந்ததில்லை. ஆனால், தியாகத்தில் அவர்கள் முன்னேறிச் சென்றனர். உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் அன்பான ஜமாஅத்தைப் பார்த்து ஈமான் அதிகரிக்கின்றது.

பெனினிலிருந்து நமது முஅல்லிம் அவர்கள் எழுதுகின்றார்கள்:

புதிதாக பைஅத் செய்த ஒருவர் அல்லாஹ் அவரது குடும்பத்தினரையும் அஹ்மதிகளாக ஆக்கிவிட வேண்டும் என்ற நிய்யத்தில் முறையாக சந்தா கொடுத்து வந்தார். அதாவது அவர் அஹ்மதியாகி விட்டார். ஆனால், குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அஹ்மதிகளாக ஆகவில்லை. அவர் கூறுகின்றார்: நான் கனவில் பார்த்தேன். நான் சந்தா கொடுத்ததன் பரக்கத்தால் எனது குடும்பத்திலுள்ள அனைவரும் அஹ்மதிகளாக ஆகி விட்டனர். இந்த கனவின் மூலம் எனக்கு அவர்களுக்கு தப்லீக் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவானது. முதலில் தப்லீக் செய்யாமல் இருந்தார். பிறகு கனவின் காரணமாக தப்லீக் செய்ய ஆரம்பித்து விட்டார்.

அவர் கூறுகின்றார்: பிறகு நான் அவர்களுக்கு தப்லீக் செய்தேன். மேலும் இந்த நோக்கத்திற்காகவும் குறிப்பாக அவர் சந்தா கொடுக்க ஆரம்பித்தார். அவர் கூறுகின்றார்: இன்று நான் இதை கூறுவதில் பெருமையடைகின்றேன். எனது முழு குடும்பமும் அஹ்மதிகளாக ஆகி விட்டனர். இது முழுக்க முழுக்க மார்க்கத்தின் வழியில் பொருள் தியாகம் செய்ததன் பரக்கத்தால் ஏற்பட்டதாகும்.

பெனினிலுள்ள கோகோரோ என்ற கிராமத்திலுள்ள ஒரு பெண் ஷாபி லெமாட்டா சாஹிபா கூறுகின்றார்:

கடந்த வருடம் எனது நிலைமை எவ்வாறிருந்தது என்றால் நான் எந்த

வேலையை அல்லது தொழிலைச் செய்ய ஆரம்பித்தாலும் அதில் இழப்பு ஏற்பட்டது. எந்தவொரு பணியும் நிறைவு பெறாமல் இருந்து வந்தது. ஒருநாள் முஅல்லிம் சாஹிப் நேர்மையுடன் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது, முறையாக அதை செலுத்தி வருவது ஆகியவற்றின் பக்கம் எனக்கு கவனமூட்டினார்கள். இதையும் செய்து பார்த்து விடுவோம். இதனால் என்ன பயன் ஏற்படும். சரியான முறையில் எனக்கு என்ன வருமானம் வருகின்றதோ அதற்கேற்ப சந்தா செலுத்துவது என முடிவெடுத்தேன்.

இவர் கூறுகின்றார்: எப்போதிருந்து நான் முறையாக சந்தா கொடுக்க ஆரம்பித்தேனோ அப்போதிருந்தே எனது தொழில் நன்கு நடக்க ஆரம்பித்தது. வீட்டில் செல்வச் செழிப்புடன் விரிவான நிலை ஏற்பட்டது. எனது எல்லா பணிகளும் சரியாக ஆரம்பித்தன. செலவு செய்கின்றவர்களுக்கு இறைவன் அதிகமாக வழங்குகின்றான் என்ற இறைவனின் வாக்குறுதி உண்மையானதாகும்.

பிறகு இந்தியாவிலிருந்து இன்ஸ்பெக்டரான கமருத்தீன் சாஹிப் கூறுகின்றார்கள்:

கேரளா மாநிலத்தில் பொருளாதார வருடத்தின் ஆரம்பத்தில் வக்ஃபே ஜதீதின் பட்ஜெட்டை தயாரிப்பதற்காக ஒரு ஜமாஅத்திற்கு சென்றபோது 26 வயதுடைய ஓர் இளைஞரை சந்தித்தேன். அவர் நான் *Interior Designing* –ல் எனது படிப்பை நிறைவு செய்துள்ளேன். எனது தந்தையாருடன் சேர்ந்து தொழிலை ஆரம்பிக்க இருக்கின்றேன் என்று கூறினார். நான் வக்ஃபே ஜதீது சந்தாவின் முக்கியத்துவம் தொடர்பாக அவரிடம் கூறினேன். அப்போதே அந்த இளைஞர் இரண்டு இலட்ச ரூபாய் என்று தனது பட்ஜெட்டை எழுதும்படி கூறினார். இப்போதுதான் வேலையைத் தொடங்கி உள்ளோன். எனது இந்த வாக்குறுதியை எவ்வாறு நிறைவேற்றுவேன் என்பது இறைவனுக்கு தான் தெரியும் என்று கூறினார்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த இளைஞர் எனக்கும் கடிதம் எழுதினார். இன்ஸ்பெக்டர் சாஹிப் துஆவிற்காக வேண்டி எனக்கு கடிதம் எழுதுமாறு அவரிடம் கூறினார். அவரும் கடிதம் எழுதுவதாக கூறினார். இன்ஸ்பெக்டர் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் மீண்டும் சந்தா வசூல் செய்வதற்காக அங்கு சென்றபோது அவர் மகிழ்ச்சியுடன் அல்லாஹ்வின் அருளால் பல வங்கிகளிலிருந்தும் எனக்கு *Interior Designing* –ற்கான வேலை கிடைத்திருக்கிறது. இதனால் வருமானத்தில் பெருமளவு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.

அப்போதே அவர் தனது வாக்குறுதியான இரண்டு இலட்சம் ரூபாயையும் முழுமையாக செலுத்தி விட்டார்.

இந்தியாவிலிருந்து நாயிப் நாஸிம் மால் வக்ஃபே ஜதீது அவர்கள் எழுதுகின்றார்கள்:

உத்திரபிரதேச மாநிலத்தில் சுற்றுப் பயணத்தின் போது கான்பூரின் பொருளாதார செயலரான முஹம்மது ஃபரீது அன்வர் சாஹிப் அவர்களைச் சந்தித்தேன். அவர்கள் வக்ஃபே ஜதீதில் செய்திருந்த வாக்குறுதியை முழுமையாக செலுத்தியதுடன் மாலை தனது வீட்டிற்கும் வருமாறு அழைப்பு விடுத்தார். மாலையில் நான் அவரது வீட்டிற்கு சென்றதும் அவர் தனது 8 வயது சிறுமி இரண்டு நாட்களாக என்னை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகக் கூறினார். பிறகு சிறுமி சஜீலா அமைதியாக தனது அறைக்குள் சென்று விட்டு சிறிது நேரம் கழிந்ததும் வெளியே வந்தாள். அவளது கையில் ஒரு உண்டியல் இருந்தது. சந்தா கொடுப்பதற்காக முழு வருடமும் நான் இதில் தொகையை ஒன்றுசேர்த்துள்ளேன். நீங்கள் இந்த எல்லா தொகையையும் இதிலிருந்து எடுத்து விட்டு எனக்கு இந்த தொகைக்கான ரசீதை தாருங்கள் என்று கேட்டாள். அதில் 735 ரூபாய் இருந்தது. அதைப் பார்த்து நான் வியப்படைந்தேன். 8 வயது சிறுமியான அவள் வக்ஃபே நவ் திட்டத்திலும் இணைந்துள்ளார். வக்ஃபே ஜதீதில் தனது வாக்குறுதியை தானே எழுதி வாக்குறுதியை விட அதிகமான தொகையை செலுத்தி வந்தாள்.

நான் இதற்கு முன்பும் கூறியுள்ளேன். குழந்தைகளிடம் இந்த ஆன்மாவை யாரால் உருவாக்க முடியும்? முழுக்க முழுக்க இறைவன் மட்டுமே குழந்தைகளின் உள்ளத்தில் இவற்றை போடுகின்றான். ஆனால், தங்களது வீட்டின் சுற்றுச்சூழலை மார்க்கத்துடன் தொடர்புடையதாக வைப்பது பெற்றோர்களின் பணியாக இருக்கின்றது. குழந்தைகளுக்கு ஏனைய நன்மைகள் பற்றி கூறுவதுடன் இறைவணக்கங்கள் பற்றி கூறுவதுடன் சந்தாவின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துக் கூறி அதனை அவர்களது உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்களும் உள்ளன. அதாவது சிறுவர்கள் சந்தாவை எடுத்துக் கொண்டு வரும்போது அந்த சிறுவர்களிடம் உங்களது தந்தை உங்கள் தரப்பிலிருந்தும் சந்தா கொடுத்து விட்டார் என்று கூறப்பட்டது. அதற்கு அந்த சிறுவர்கள் தந்தையார் கொடுத்தார் என்றால் அதற்கான நற்கூலி தந்தையாருக்கு கிடைத்து விடும். எங்களது பாக்கெட் மணியிலிருந்து நாங்களே சந்தா செலுத்துவோம் என்று கூறினர்.

பிரான்ஸின் அமீர் சாஹிப் கூறுகின்றார்கள்:

ஒரு நண்பருக்கு வக்ஃபே ஜதீது சந்தா தொடர்பாக கூறப்பட்டது. அப்போது அவர் என்னிடம் என்ன தொகை இருக்கின்றதோ அதை முழுமையாக சந்தாவில் கொடுத்து விடுகின்றேன் என்றவாறு முழுமையாக கொடுத்து விட்டார். வீட்டிலுள்ளவர்கள் கொஞ்சம் தொகையை வைத்து விடுங்கள் என்றனர். வீட்டிற்கான செலவு எப்படி நடக்கும்? என்று கேட்டனர்.

அவர் கூறுகின்றார்: நான் வக்ஃபே ஜதீது சந்தாவில் வாக்குறுதி எழுதியுள்ளேன். அதை நான் எப்படியும் கொடுத்தே ஆக வேண்டும். வீட்டின் செலவிற்கான ஏற்பாட்டை அல்லாஹ் தானே செய்வான் என்று நான் கூறினேன்.

அவர் கூறுகின்றார்: அடுத்த மாதத்தில் அரசாங்கத்தின் ஆரோக்கியத்துறை தரப்பிலிருந்தும் அவருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் உங்களது மருத்துவ அறிக்கையைப் பார்த்து விட்டு நாங்கள் உங்களுக்கு இரண்டு வருடத்திற்கான செலவை வழங்க தீர்மானித்துள்ளோம் என்று எழுதப்பட்டிருந்தது. மூன்று மாதங்களுக்கான தொகையையும் அவர்கள் அத்துடன் அனுப்பி இருந்தனர். பிறகு அந்த தொகையை அவர் பார்த்தபோது அது வக்ஃபே ஜதீதில் சந்தாவாக கொடுத்த அந்த தொகையை விட நூறு மடங்கு அதிகமாக இருந்தது. அல்லாஹ் தனது அருளாலும் கருணையாலும் பொருள் தியாகத்திற்கான கனியை ஒரு மாதத்திற்குள் வழங்கி விட்டான்.

***U.K.*** –ன் லஜ்னா தஹ்ரீகே ஜதீது செயலர் அவர்கள் கூறுகின்றார்கள்:

இங்குள்ள ஒரு ஹல்காவின் வக்ஃபே ஜதீது செயலர் அவரிடம் இவ்வாறு கூறினார்: ஒரு பெண் பொருளாதார ரீதியாக மிகவும் பலவீனமாக இருந்தார். சந்தா கொடுக்க முடியாதவராக இருந்தார். பிறகும் கூட குறைந்தபட்சம் எவ்வளவு முடியுமோ அந்த அளவு வாக்குறுதியை அவர் எழுதினார். அந்தப் பெண் கூறுகின்றார்: வாக்குறுதியை எழுதிய பிறகு அவர் அல்லாஹ் இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்க வேண்டும் என்று துஆ செய்ய ஆரம்பித்தார். இந்தப் பெண்ணுக்கு தையல் தெரியும். சில நாட்களுக்குப் பிறகு தைப்பதற்கான ஆர்டர் கிடைக்க ஆரம்பித்தது. இதற்குப் பிறகு அந்தப் பெண் தனது வாக்குறுதியை நிறைவேற்றத் தகுதி உடையவராக ஆனதுடன் மட்டுமின்றி அவரது வருமானமும் போதுமான அளவு அதிகமாக கிடைக்க ஆரம்பித்தது. இதனால் அவர் தனது வாக்குறுதியையும் இன்னும் அதிகமாக்கி விட்டார். இங்கு இதையும் நான் கூறி விடுகின்றேன். தஹ்ரீகே ஜதீதிலும் வக்ஃபே ஜதீதிலும் *U.K.* –லுள்ள லஜ்னாக்கள் மிகுந்த உழைப்புடனும் தைரியத்துடனும் தமது இலக்கை மட்டும் நிறைவு செய்ததுடன்

நின்றுவிடவில்லை. இலக்கை விட அதிகமான தொகையை அவர்கள் செலுத்தியுள்ளனர்.

பெனினின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:

பெனினின் வடக்குப் பகுதியிலும் மையப் பகுதியிலும் பெரும் எண்ணிக்கையில் ஃபவ்லானி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் குடியமர்ந்துள்ளனர். கடந்த வருடம் இந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பைஅத் செய்திருந்தனர். இந்த கோத்திரத்தின் மூன்று கிராமங்கள் இந்தப் பகுதியிலுள்ள மவ்லவிகளின் எதிர்ப்பு மற்றும் கடுமையான அழுத்தம் ஆகியவற்றின் காரணமாக இவர்கள் பைஅத் செய்த பிறகு பின்தங்கி விட்டனர். புர்கினோஃபாஸோவிலிருந்து ஃபவ்லானி கோத்திரத்துடன் தொடர்புடைய ஒரு முஅல்லிம் பெனினிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதன் மூலம் அவர் இந்தப் பகுதியிலுள்ள மக்களிடம் தொடர்பு கொண்டு அவர்களது தவறான எண்ணங்களை அகற்ற வேண்டும் என்ற திட்டம் இருந்தது. அந்த முஅல்லிம் அந்தப் பகுதியில் ஒரு மாதம் வரை பணி செய்த பிறகு அந்த மூன்று கிராமங்களும் அல்லாஹ்வின் அருளால் மீண்டும் ஜமாஅத்தில் இணைந்து ஈமானில் மிகப்பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. மூன்று கிராமத்திலுள்ளவர்களும் சேர்ந்து ஒரு பெரும் தொகையை பயணத்திற்காக செலவு செய்தவாறு பேருந்துகளில் வந்து பெனின் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டனர். ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு மீண்டும் திரும்ப தங்களது கிராமத்திற்கு அவர்கள் வந்ததும் சிறிது நாட்கள் கழிந்த பிறகு ஜமாஅத்தின் முஅல்லிம், அவர்கள் இருக்கின்ற கிராமத்திற்கு சென்றார். மேலும் புதிதாக பைஅத் செய்தவர்கள் பொருள் தியாகத்தில் பங்கு பெற வேண்டும் என்று நான் கூறியிருப்பதாக அவர்களிடம் கூறினார். மேலும் இது டிசம்பரின் மாதமாகும். சந்தா வக்ஃபே ஜதீது கொடுத்து முடிப்பதற்கான கடைசி மாதமும் இதுதான் என்று கூறினார்.

அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஏற்கனவே ஒரு பெரும் தொகையை அவர்கள் செலவு செய்திருந்தும் கூட, அவர்களிடம் பொருளாதார நெருக்கடி இருந்தும் கூட அவர்களது ஈமானிய உணர்வு எந்த அளவு அதிகமாக இருந்தது என்றால் இதைக் கேட்டதும் அந்த மூன்று கிராமத்தைச் சேர்ந்த மக்களும் உடனடியாக வக்ஃபே ஜதீது சந்தாவிலும் பங்கு பெற்றனர். இவ்வாறு இந்த கோத்திரத்தைச் சேர்ந்தவர்களில் ஏறக்குறைய ஆயிரம் பேர் புதிதாக பைஅத் செய்தனர்.

இதுதான் பொருள் தியாகம் தொடர்பான சில சம்பவங்களாகும். எவ்வாறு துடிப்புடன் மக்கள் சந்தாக்களை செலுத்துகின்றனர் என்பதை நாம்

பார்க்க முடிகின்றது. பல சம்பவங்களிலும் இறைவன் எவ்வாறு பொருள் தியாகம் செய்தவர்களுக்கு பன்மடங்காக்கி அதனை திருப்பிக் கொடுத்துள்ளான் என்பதையும் நாம் பார்க்கின்றோம். எனவே, இறைவன் உண்மையான வாக்குறுதியை வழங்குபவனாக இருக்கின்றான். இதில் இந்த சம்பவங்களைப் பார்த்து எங்கு இறைவனது சொற்களிலுள்ள உண்மை வெளிப்படுகின்றதோ நமக்கும் அதில் அனுபவம் இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது ஜமாஅத்துடன் அது உலகின் எந்த நாட்டில் இருந்தாலும் அதனோடு இறைவனின் ஆதரவு இருப்பதன் காட்சியையும் நாம் பார்க்க முடிகின்றது.

நான் இதற்கு முன்னர் கடந்த வருடங்களிலும் கூறியுள்ளேன். வக்ஃபே ஜதீதின் திட்டம் மூலமாக பாகிஸ்தானுக்கு வெளியே ஆப்பிரிக்கா மற்றும் இந்தியாவின் தேவைகளை குறிப்பாக நிறைவேற்றுவதற்காக அதனை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கு வெளியே உள்ள நாடுகளில் குறிப்பாக இந்த திட்டம் வலியுறுத்திக் கூறப்படாமல் இருந்தது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் அல்லது பணக்கார நாடுகளில் வசூலாகும் தொகை ஆப்பிரிக்காவில் செலவிடப்படுகின்றது. அல்லாஹ்வின் அருளால் இப்போது ஆப்பிரிக்கா தொடர்பான சில விபரங்களை நான் உங்களுக்கு கூற விரும்புகின்றேன். ஆப்பிரிக்காவின் 18 நாடுகளில் 95 பள்ளிவாயில்கள் கட்டப்பட்டு வருகின்றன. சில பெரும் பெரும் பள்ளிவாயில்களும் கூட கட்டப்பட்டு வருகின்றது. ஏனென்றால், அங்கு எண்ணிக்கையும் அதிகமாகின்றது. தப்லீகிற்கான புதிய களமும் திறந்துள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டினார்கள். அதாவது எங்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்த வேண்டியது இருக்கின்றதோ தப்லீக் செய்ய வேண்டியதுள்ளதோ அங்கு பள்ளிவாயில்களை கட்டுங்கள் என்று கூறியுள்ளார்கள். (மல்பூஸாத் தொகுதி 7, பக்கம் 119; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆப்பிரிக்காவை தவிர உலகின் பல இடங்களிலும் இந்தப் பணி நடந்து கொண்டிருக்கின்றது. இப்போது ஆப்பிரிக்காவையும் சேர்த்து 25 நாடுகளிலும் ஏனைய 7 நாடுகளிலும் இவ்வருடம் 204 புதிய பள்ளிவாயில்கள் கட்டப்பட்டுள்ளன. 186 பிரச்சார நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன. ஐரோப்பா மற்றும் மேற்கத்திய நாடுகளின் வக்ஃபே ஜதீது சந்தாவின் ஏறக்குறைய 80 சதவிகிதம் ஆப்பிரிக்க நாடுகளில் செலவிடப்படுகின்றது. ஆப்பிரிக்க அஹ்மதிகள் பெருமளவில் பொருள் தியாகம் செய்திருந்தும் கூட அங்கு பைஅத்துகளின் எண்ணிக்கை அதிகமாக ஆன பிறகும் கூட புதிதாக பைஅத் செய்கின்றவர்கள் ஏழைகளாக இருப்பதால்

அவர்கள் முழுமையாக தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. எந்நிலையிலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. இதுபற்றி சம்பவங்களிலும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு அவர்கள் தியாகங்களைச் செய்கின்றனர் என்பதைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்களும் நடக்கின்றன. அத்தகைய இரண்டு சம்பவங்களை நான் கூறியிருந்தேன். அதாவது எதிரிகள் பைஅத் செய்தவர்களை பல்வேறு வற்புறுத்தல்களுக்கு ஆளாக்கி அவர்களை ஜமாஅத்தை விட்டு விலகிச் செல்ல வைப்பதற்கு முயற்சி செய்கின்றனர். இவர்களில் பலவீனமானவர்களும் இருக்கின்றனர். அவர்கள் விலகி விடுகின்றனர். ஆனால், வலுவான ஈமானுடைய பலரும் இருக்கின்றனர். அவர்கள் எதையும் பொருட்படுத்துவதில்லை.

எவ்வாறிருப்பினும் அவர்களுக்கு இதன் பக்கம் கவனமூட்டுவதற்காக இவர்களிடம் பைஅத் வாங்கிய பிறகு இவர்களுடன் தொடர்ந்து தொடர்பு வையுங்கள். எப்போதும் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டே செல்லுங்கள். அவர்களிடம் மீண்டும் மீண்டும் செல்லுங்கள். அதன் மூலமாக தர்பிய்யத் தொடர்பான அம்சங்களும் நமக்கு முன்னால் வந்து கொண்டிருக்க வேண்டும். அவர்களுக்கு தர்பிய்யத் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நான் ஜமாஅத்துகளிடம் கூறியிருந்தேன். ஆப்பிரிக்க நாடுகளில் பல பகுதிகளும் மிகத் தொலைவில் இருக்கின்றது. காடுகளைக் கடந்து அந்த பகுதிக்கு செல்ல வேண்டியது இருக்கின்றது. அங்குள்ள தொடர்புகளும் வலுவானதாக இருப்பதில்லை. மிகவும் சிரமத்துடன் அங்கு தொடர்புகளை நிலைநாட்ட வேண்டியது வருகின்றது. அதன் காரணமாக மிக நீண்ட காலகட்டம் வரை ஜமாஅத்துகளுடன் அல்லது புதிய அஹ்மதிகளுடன் தொடர்பில்லாமல் இருக்கின்றது. பிறகு முபல்லிக்குகள், முஅல்லிம்கள் ஆகியோர் குறைவாகவே அங்கிருக்கின்றனர். கஷ்டப்பட்டு சென்றாலும் மீண்டும் மீண்டும் சென்றால் தான் தொடர்புகள் ஏற்பட முடியும். ஆனால், இந்த குறைவின் காரணமாக அங்கு நம்மால் செல்ல முடியவில்லை. இதனால் பல பைஅத்துகளும் வீணாகி விடுகின்றன. அந்த நாட்டிலுள்ள ஜமாஅத்துகளுக்கு குறிப்பாக ஆரம்பத்தில் ஒரு வருடம் வரை அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

எனவேதான், எனது கிலாஃபத்தின் முதல் வருடத்திலேயே ஜமாஅத்துகளிடம் எண்ணற்ற பைஅத்துகள் வீணாகிக் கொண்டே இருந்தன. முன்பு நடந்த பைஅத்துகளின் குறைந்தபட்சம் 70 சதவிகித மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை திரும்பக் கொண்டு வர வேண்டும் என்று

கூறியிருந்தேன். அல்லாஹ்வின் அருளால் அதன் விளைவாக குறிப்பாக ஆப்பிரிக்காவில் ஜமாஅத்துகள் இதற்காக முயற்சிகளை செய்தது. தொடர்பு ஏற்பட்ட போது நீங்கள் பைஅத் வாங்கி விட்டு எங்களை விட்டு விட்டுச் சென்று விட்டீர்கள் என்று அந்த மக்கள் புகார் கூறினர். அவர்கள் உள்ளத்தால் அஹ்மதிகளாக இருந்தனர். பலரும் அப்படிப்பட்டவர்களாகத்தான் இருந்தனர். ஆனால் அஹ்மதிய்யத்தின் போதனையைப் பற்றி அவர்களுக்கு தெரியாது. தர்பிய்யத்தில் குறைவு இருந்தது.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ்வின் அருளால் இலட்சக்கணக்கான எண்ணிக்கையில் புதிய தொடர்புகள் ஏற்பட்டன. பிறகு அந்த மக்கள் திரும்பி வந்தனர். இப்போது தர்பிய்யத்திற்கான துடிப்புடன் செயல்படுகின்ற அமைப்பு ஆரம்பமாகி விட்டது. இதில் மேலும் வலிமையை உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. தொடர்புகளை மீண்டும் நிலைநாட்டுவதில் எல்லாரையும் விட அதிகமான முயற்சியை கானா செய்துள்ளது. அடுத்து நைஜீரியா இரண்டாவது இடத்தில் வருகின்றது. அதற்கு பிறகு ஆப்பிரிக்காவின் ஏனைய நாடுகள் வருகின்றன. தன்ஸானியாவில் மிகவும் அதிகமாக குறைபாடு இருக்கின்றது. அவர்கள் அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். தங்களது தொடர்புகளை துடிப்பாக செயல்பட்டு அவர்கள் நிலைநாட்ட வேண்டும். ஒரு காலத்தில் அங்கு அதிகமாக பைஅத் நடந்ததாக கூறப்படுகின்றது. அவர்கள் எல்லாரையும் தேட வேண்டும். ஐரோப்பாவில் 20 வருடங்களுக்கு முன்பு அல்லது அதை விட அதிகமான காலகட்டத்திற்கு முன்பு போஸ்னியாவில் நிலைமை மோசமான போது ஜெர்மனியில் போஸ்னியாவைச் சேர்ந்தவர்கள் வந்தனர். அப்போது போஸ்னியாவைச் சேர்ந்த ஒரு இலட்சம் பேர் பைஅத் செய்தனர் என்று கூறப்படுகின்றது. ஆனால் அவர்கள் தமது நாடுகளுக்குத் திரும்பிச் சென்ற பிறகு அவர்களுடன் இருந்த தொடர்பு முடிந்து விட்டதால் அவர்கள் எங்கு சென்றனர் என்று தெரியவில்லை. இந்த வகையில் அந்த நாடுகளிலும் தொடர்புகளை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது.

இவ்வாறே இந்தியாவில் மேற்கு வங்களாத்தில் பைஅத்துகள் நடந்தன என்று கூறப்படுகின்றது. அங்கும் அவர்களைத் தேட வேண்டிய தேவை இருக்கின்றது. புதிதாக பைஅத் செய்தவர்களை சந்தா அமைப்பில் பங்கு பெற வைத்து விட்டால் பிறகு வலுவான தொடர்பு இருக்கும். ஈமானில் வலிமை ஏற்படுவதுடன் ஜமாஅத் அமைப்புடனும் அவர்களுக்கு தொடர்பு நிலைபெறுகின்றது. எனவே, தஹ்ரீகே ஜதீதிலும், வக்ஃபே ஜதீதிலும் புதிதாக

வருபவர்களை பங்கு பெற வையுங்கள் என்று நான் கூறியிருந்தேன். பழைய நபர்களும் இதுபற்றி அவர்களுக்கு உணர்வூட்ட வேண்டும். சில ஜமாஅத்துகள் இந்த விஷயத்தில் மிகவும் துடிப்புடன் செயல்படுகின்றன. அவர்கள் பணிகளை நல்ல முறையில் செய்கின்றனர். ஆனால், பல இடங்களில் சோம்பேறித்தனமும் இருந்து வருகின்றது. ஒருவர் ஒரு வருடத்தில் 10 பென்ஸ்களை தியாகம் செய்வதாக இருந்தாலும் கூட அதை கூட அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். குறைந்தபட்சம் அவருடன் நமக்கு தொடர்பு ஏற்பட்டு விடும் என்று நான் கூறியிருந்தேன். ஒவ்வொருவருக்கும் நாம் பொருள் தியாகம் செய்ய வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும்.

அல்லாஹ்வின் அருளால் பொருள் தியாகம் செய்பவர்களின் எண்ணிக்கையில் ஒவ்வொரு வருடமும் அதிகரிப்பு இருந்து வருகின்றது. ஆனால், எந்த அளவு அதிகரிப்பு ஏற்பட வேண்டுமோ அந்த அளவு ஏற்படவில்லை. உதாரணமாக, இந்த வருடம் வக்ஃபே ஜதீதில் பங்கு பெறுவதில் 85,000 பேர் அதிகரித்துள்ளனர். இது ஜமாஅத்தின் முன்னேற்றத்தின் தரமாகும். அல்ஹம்துலில்லாஹ்! பொருள் தியாகத்தில் அதிகரிப்பு இருந்து வருகிறது. ஆனால் இது தொடர்பாக முயற்சிகள் செய்யப்பட்டால், மேலும் இந்த வருடம் பைஅத் செய்தவர்களிலிருந்து 20 சதவிகிதம் வயதில் பெரியவர்களாக உள்ளவர்களையும் இத்திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்திருந்தால் பைஅத் அடிப்படையில் பார்க்கும்போது ஒரு இலட்சத்தி 10 ஆயிரம் பேர் என்ற அதிகரிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். எனவே, முன்னேற்றம் சந்தேகமின்றி அல்லாஹ்வின் அருளால் ஏற்படுகின்றது. ஆனால், இதில் மேலும் அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. இனி வரும் வருடத்தில் புதிய நபர்களை இந்த திட்டத்தில் இணைப்பதற்கான இலக்கு புதிய வடிவில் வகாலத்தே மால் தரப்பிலிருந்தும் ஜமாஅத்துகளுக்கு வழங்கப்படும் – இன்ஷா அல்லாஹ். முழுமையாக கவனம் செலுத்துங்கள். எனக்கு அல்லாஹ்வின் அருளால் செலவுகளை எவ்வாறு முழுமையாக நிறைவேற்ற முடியும் என்ற கவலை இல்லை. அல்லாஹ் அதை நிறைவேற்றுவான் – இன்ஷா அல்லாஹ். இது அவனது வாக்குறுதியாகும். தியாகத்தின் ஆன்மாவை அதிகமாக உருவாக்கக் கூடியவர்கள் நமக்கு தேவைப்படுகின்றனர். பிறகு அதை மேலும் வளர்ச்சி அடையச் செய்ய வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்காக பொறுப்பாளர்கள் துஆவும் செய்ய வேண்டும். முயற்சியும் செய்ய வேண்டும். மற்ற அஹ்மதிகளும் தொடர்புகளை நிலைநாட்டுகின்ற பணியைத் தொடர்ந்து செய்து வாருங்கள். எவர்கள் நல்லியல்பு கொண்டவர்களாக இருக்கின்றனரோ எவர்களை அல்லாஹ்

காப்பாற்ற விரும்புகின்றானோ அவர்கள் திரும்பி வருவர் இன்ஷா அல்லாஹ். பலவீனமானவர்கள் நம்மை விட்டும் மிகத் தொலைவில் விலகிச் சென்று விட்டால் நமக்கு அவர்கள் மீது கண்டிப்பாக அனுதாபம் இருக்கின்றது. ஏனென்றால் அல்லாஹ்வின் இந்த அருட்கொடையைப் பெற்ற பிறகு அதனை அவர்கள் தொலைத்து விட்டனர். ஆனால், நமது எண்ணிக்கையில் குறைவு ஏற்படுகின்றதே என்ற எந்தக் கவலையும் நமக்கில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் எண்ணிக்கையை விட அதிகமாக கலப்பற்ற மனத்தூய்மை, பற்று, ஈமான் ஆகியவற்றில் முன்னேறிச் செல்கின்ற தூய உள்ளம் கொண்டவர்கள் ஜமாஅத்தில் உருவாக வேண்டும் என்பதையே வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எனவே, புதிதாக பைஅத் செய்தவர்கள் மற்றும் பழைய அஹ்மதிகள் சம்பவங்களில் பொருள் தியாகத்தின் அதிகரிப்பு ஏற்படுவதிலுள்ள தரம் உயர்வதன் காரணமாக அவர்களது கலப்பற்ற மனத்தூய்மையைப் பற்றி அவை நமக்கு தெரிவிக்கின்றன. ஆனால், ஜமாஅத் அமைப்பானது வீணாகி விட்டவர்களையும் பற்றி தெரிந்து கொள்வதற்கு முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இந்தியாவிலும் கூட வங்காளத்திலுள்ள பகுதிகளில் பைஅத்துகள் நடந்தன. அவற்றை ஆய்வு செய்வதற்கான நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும். அதன் மூலம் தொடர்புகள் துண்டிக்கப்படுவதற்குரிய அல்லது பைஅத் செய்தவர்கள் பின்தங்கி விலகிச் செல்வதற்கான காரணம் தெரிய வேண்டும். எதிர்காலத்தில் இந்த குறைகளை நம் கண் முன்னால் வைத்தவாறு தப்லீக் மற்றும் தர்பிய்யத் தொடர்பாக முழுமையாக திட்டம் வகுக்க வேண்டும். இவ்வாறே உலகின் பிற இடங்களிலும் இந்த வழிகாட்டலுக்கேற்ப பணிகளைச் செய்ய வேண்டும். எவர் ஜமாஅத்தில் இணைகின்றாரோ அவர் எவ்வளவு தான் தொலைவிலுள்ள பகுதிகளில் இருந்தாலும் அவருடன் எவ்வாறு தொடர்பு கொள்வது? என்று சிந்திக்க வேண்டும். தொடர்பு கொள்ள வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அல்லாஹ் ஜமாஅத்திற்கு இந்தப் பணியைச் செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

ஜனவரியின் முதல் வாரத்தில் அல்லது இரண்டாவது வாரத்தில் வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பு இருக்கும். இப்போது நான் நமது இந்த வழிமுறைக்கேற்ப இதற்கான அறிவிப்பை செய்கின்றேன். கடந்த வருடத்தின் சில புள்ளி விபரங்களையும் உங்கள் முன் வைக்கின்றேன்.

வக்ஃபே ஜதீதின் 57வது வருடம் அல்லாஹ்வின் அருளால் முடிவடைந்தது. அதன் 58வது வருடம் ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து

ஆரம்பித்து விட்டது. உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த வருடம் அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் பொருள் தியாகத்தில் 62 இலட்சத்து 9 ஆயிரம் பவுண்டுகள் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 7 இலட்சத்து 31 ஆயிரம் பவுண்டுகள் அதிகமாகி இருக்கின்றது – அல்ஹம்துலில்லாஹ்!

இந்த தியாகத்தில் பாகிஸ்தான் பட்டியலில் முதல் இடத்திலேயே இருக்கின்றது. கடந்த வருடம் பிரிட்டன் மேலே இருந்தது. இப்போது பாகிஸ்தானுக்கு பிறகு பிரிட்டன் வந்துள்ளது. அதற்கு பிறகு அமெரிக்கா, ஜெர்மனி, கனடா, இந்தியா, ஆஸ்திரேலியா அடுத்தடுத்து முறையே வந்துள்ளது. ஆஸ்திரேலியாவில் எண்ணிக்கையை அதிகமாக்குவதன் அடிப்படையிலும் வசூலின் அடிப்படையிலும் அதிகமாக பணிகள் நடந்துள்ளன – மாஷா அல்லாஹ். ஆஸ்திரேலியாவுக்கு பிறகு இந்தோனேஷியா வருகின்றது. அதன் பிறகு துபாய், பெல்ஜியம் மற்றும் இன்னொரு அரபு நாடு வருகின்றது.

கரன்ஸி கணக்கின் அடிப்படையில் அதிகரிப்பு ஏற்படுத்துவதில் ஆஸ்திரேலியா சிறப்பாக செயல்பட்டுள்ளது. அவர்கள் இதில் 123 சதவிகிதம் அதிகரிப்பு செய்துள்ளனர். அதன் பிறகு கனடா 21 சதவிகிதமும் அதற்குப் பிறகு இந்தியாக ஏறக்குறைய 17 சதவிகிதமும் அதிகரிப்பு செய்துள்ளது.

தனிநபர் சந்தா செலுத்துவதன் அடிப்படையில் பார்க்கும் போது அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. ஒரு நபருக்கு 70 பவுண்டு என்ற விகிதத்தில் அவர்கள் சந்தா செலுத்தியுள்ளனர். சுவிட்ஸர்லாந்து 59 சதவிகிதமும், *U.K.* 51 சதவிகிதமும் ஆஸ்திரேலியா 56 சதவிகிதமும் அதன் பிறகு பெல்ஜியம், ஃபிரான்ஸ், கனடா, ஜெர்மனி ஆகியவை வருகின்றன. இந்த பெரும் ஜமாஅத்துகளில் ஜெர்மனி எல்லாவற்றையும் விட இறுதியில் வருகின்றது.

வக்ஃபே ஜதீது சந்தாவில் இணைந்தவர்களின் எண்ணிக்கை 11 இலட்சத்து 29 ஆயிரம் பேரையும் கடந்து நிற்கின்றது. எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் அடிப்படையில் மாலி, பெனின், நைஜர், புர்கினோஃபாஸோ, கேம்பியா, கேமரூன் ஆகிய ஜமாஅத்துகள் குறிப்பிடத்தக்கவையாகும். ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பார்க்கும் போது ஆப்பிரிக்க நாடுகளில் எல்லாவற்றையும் விட முதலாவதாக கானா வருகின்றது. பிறகு நைஜீரியா அதன் பிறகு மொரீஷியஸ் வருகின்றது.

பாகிஸ்தானின் முதல் மூன்று இடங்களிலுள்ள ஜமாஅத்துகளில் வாலிபப் பருவத்தை அடைந்தவர்களில் முதலாவது இடத்தை லாஹூரும், இரண்டாவது இடத்தை ரப்வாவும், மூன்றாவது இடத்தை கராச்சியும் பெறுகின்றது.

மாவட்ட அளவில் ராவல்பிண்டி முதலிடத்திலும், அதன் பிறகு முறையே ஃபைஸலாபாத், சர்கோதா, குஜ்ரான்வாலா, குஜராத், உமர்கோட், முல்தான், ஹைதராபாத், பாஹல்பூர், பெஷாவர் ஆகியவை வருகின்றன.

மாவட்ட அளவில் அத்ஃபால்களின் தரவரிசை இவ்வாறு உள்ளது. முதலிடத்தில் சியோல்கோட், பிறகு ராவல்பிண்டி, பைஸலாபாத், சர்கோதா, குஜ்ரான்வாலா, நரோவால், குஜ்ராத், உமர்கோட், ஹைதராபாத், டேரா காஷிகான் ஆகியவை அடுத்தடுத்து வந்துள்ளன.

ஒட்டுமொத்த வசூலின் அடிப்படையில் பிரிட்டனின் முதல் பத்து ஜமாஅத்துகளின் தர வரிசை இவ்வாறு உள்ளது. 1) *Bermingum West* 2) *Reins Park* 3) *Masjid Fazl* 4)*Hooster Park* 5) *Bermingum Central* 6) *Wimbledon Park* 7) *New Modern* 8) *Honslow North* 9) *Cheam.*

மண்டலங்களின் தர வரிசை இருவாகும். முதல் இடத்தில் *London Region,* பிறகு *Midlands, Middle Sects, Islamabad, North East* மற்றும் *South Region* வருகின்றது.

ஐந்து சிறிய ஜமாஅத்துகளின் தர வரிசை இதுவாகும். 1) *Span Valley* 2) *Livengtom Spaw* 3) *Bromleon* 4) *Scunthrope* 5) *Wolverthampton.*

வசூலின் அடிப்படையில் முதல் பத்து இடங்களிலுள்ள அமெரிக்க ஜமாஅத்துகள் இதுவாகும். *Sillicon Valley* முதலிடத்திலும், இரண்டாமிடத்தில் *Detroit,* பிறகு அடுத்து *Herris Burg, Los Angeles, Boston, Central Vergenia, Delles, Houston* மற்றும் *Philadelbia* வருகின்றன.

ஜெர்மனியின் முதல் 5 உள்ளூர் அமாரத்துகள் இவையாகும். முதலிடத்தில் *Humburg,* பிறகு *Frankfort, Grosscorow, Damsterd, Werbiss Burdern* ஆகியவை வருகின்றன.

வசூலின் அடிப்படையில் முதல் 10 ஜமாஅத்துகள் முறையே, *Redear Mark, Novise, Nidda, Flayyers Heing, Colon, Strian Burg, Goblenz, Mehdiabad, Fulda.*

வசூலின் அடிப்படையில் கனடா ஜமாஅத்தின் தர வரிசை முறையே 1) *Hadminton* 2) *Dehhon* 3) *Milton George* 4) *West Town* 5) *Sisco Town South* 6) *Sisco Town North.*

வசூலின் அடிப்படையில் இந்தியாவின் தர வரிசை இதுவாகும். கேரளா முதலிடத்திலும், அதன் பிறகு ஜம்மு காஷ்மீர், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், மேற்கு வங்காளம், ஒரிஸா, கர்நாடகா, காதியான், பஞ்சாப், உத்திர பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார், இலட்சத்தீவு மற்றும் ராஜஸ்தான் வருகின்றது.

இந்திய ஜமாஅத்துகளின் வசூலின் அடிப்படையில் முதல் பத்து இடத்திலுள்ள ஜமாஅத்துகளில் முதல் இடத்தில் கருளாயி பிறகு காலிகட், ஹைதராபாத், கொல்கத்தா, காதியான், கண்ணூர் டவுண், சூளூர், பைங்காடி, சென்னை, பெங்களூர் பிறகு இறுதியில் கருநாகப்பள்ளி, பத்தபிரியம், கேரவ் ஆகிய 3 ஜமாஅத்துகள் உள்ளன.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகளில் முதலிடத்தில் *Black Town* பிறகு *Melbourne, Mount Droit, Adelide, Marsiten Park, Brisbane, Canberra, Perth, Tasmania, Darwen* ஆகிய ஜமாஅத்துகள் வருகின்றன.

அல்லாஹ் தியாகம் செய்பவர்களின் பொருள்களிலும் உயிரிலும் அளவற்ற பரக்கத்துகளை வழங்குவானாக!

இறுதியில் துஆவிற்காக நான் கவனமூட்ட விரும்புகின்றேன். பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். ரப்வாவிலும் சில நாட்களாக எதிரிகள் தரப்பிலிருந்து நிலைமைகளை மோசமாக்குவதற்கு பெரும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அல்லாஹ் அவர்களின் தீங்கிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியையும் பாதுகாப்பானாக! அவர்களது தீங்கை அவர்கள் பக்கமே திருப்பி விடுவானாக! ரப்வாவிலும் அமைதி மற்றும் பாதுகாப்பின் சூழ்நிலை நிலவட்டுமாக! அரசாங்கத்திற்கும் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அவர்கள் சரியான முறையில் இந்த விவகாரத்தை சரி செய்ய வேண்டும். இவ்வாறே முஸ்லிம் உலகிற்கும் ஐரோப்பாவில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

பிரான்ஸில் கொடூரமான ஒரு சம்பவம் நடந்துள்ளது. இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது பெயரில் இந்த கொடூரமான செயல் நடந்துள்ளது. இதற்கும் இஸ்லாத்தின் போதனைக்கும் சிறிதளவு கூட எவ்வித தொடர்பும் இல்லை. சட்டத்தை கையில் எடுத்தவாறு ஒருவரை கொலை செய்வதற்கு இஸ்லாத்தின் போதனையுடன் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை நாம் எப்போதும் கூறி வருகின்றோம். பிறகும் கூட பெயர் தாங்கி முஸ்லிம்களும் முஸ்லிம் அமைப்புகளும் இந்த செயல்களைச் செய்வதிலிருந்தும் இந்த அநீதிகளிலிருந்தும் விலகுவதில்லை. இதன் விளைவாக மேற்கத்திய நாடுகளில் வாழ்கின்ற அல்லது ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கும் இந்த நாடுகளின் வாழ்கின்ற உள்ளூர் மக்களின் தவறான எதிர்நடவடிக்கையைச் சந்திக்க வேண்டியது வரலாம். இதுமட்டுமின்றி இந்த எதிர் நடவடிக்கையில் எந்த பத்திரிகைக்கு எதிராக இந்த செயல்கள் செய்யப்பட்டுள்ளதோ அதாவது இந்த பத்திரிகையின் ஆசிரியரையும் அதில்

பணிபுரிந்த மற்ற மக்களையும் அநீதியான முறையில் கொன்றுள்ளனர். எனவே, இந்த பத்திரிகையும் இங்குள்ள மக்களும் இங்குள்ள அச்சகமும் தவறான எதிர்நடவடிக்கையை மேற்கொண்டவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது தவறான தாக்குதலை நடத்தலாம். அல்லாஹ் இங்குள்ள அரசாங்கத்திற்கும் இந்த தவறான எதிர்நடவடிக்கையை தடுப்பதற்காக முயற்சி செய்கின்ற நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக! எவர்கள் குற்றவாளிகளாக இருக்கின்றனரோ அவர்களை இவர்கள் பிடிக்க வேண்டும். சட்டத்திற்கேற்ப அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். ஆனால், தவறான எதிர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் எந்த முஸ்லிம்களுக்கு புரிய வைப்பதற்கு யாருமே இல்லாமல் இருக்கின்றதோ அவர்களும் பிறகு தவறான எதிர்நடவடிக்கையைக் காட்டுவர். இவ்வாறு குழப்பம் மற்றும் தீமைகளின் தொடர் வளர்ந்து கொண்டே செல்லும். இது அதிகமாவதற்கான அபாயம் இருக்கின்றது.

இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள நபர்களது பணியாக இது இருக்கின்றது. அதாவது அவர்கள் இரு தரப்பில் உள்ளவர்களையும் அநீதியிலிருந்து காப்பாற்றுவதற்காக துஆ செய்ய வேண்டும். இவ்வாறே இந்த நாட்களில் அதிகமாக ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். தமது வட்டத்தில் அமைதியின் சூழலை உருவாக்குவதற்காக எவர்களால் செயலளவில் முயற்சி செய்ய முடியுமோ அவர்கள் அத்தகைய முயற்சிகளைச் செய்ய வேண்டும். அல்லாஹ் உலகிற்கு குழப்பத்தின் சூழ்நிலையிலிருந்து இரட்சிப்பை வழங்குவானாக! இந்த குழப்பத்தின் சூழ்நிலை விரைவாக அமைதியின் சூழ்நிலையாக மாறட்டும்!

بسم الله الرحمن الرحيم

## உங்களுக்குத் தெரியுமா ?

27 டிசம்பர் 1957 **ஆம்** ஆண்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வக்ஃபே ஜதீது திட்டத்தினை நிறுவினார்கள். வக்ஃபே ஜதீது திட்டத்தின் முக்கிய நோக்கம் முஅல்லிம்கள் மூலம் தஃலீம் மற்றும் தர்பிய்யத் பணிகளை விரிவடையச் செய்வதாகும்.

வக்ஃபே ஜதீது திட்டம் தொடர்பாக முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

இந்த வேலை இறைவனுடையதாகும். நிச்சயமாக இது நிறைவேறியே தீரும்..... மேலும் இந்த கடமையை நிறைவேற்ற எனக்கு எனது வீட்டை விற்க நேரிட்டாலும் எனது துணிமணிகளை விற்க நேரிட்டாலும் நான் இதனை அப்போதும் நிறைவேற்றியே தீருவேன்.

மேலும் வக்ஃபே ஜதீது திட்டம் தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்த (வக்ஃபே ஜதீத் திட்டம்) சந்தா எந்த அளவு விரிவடையுமோ அந்த அளவு இறை அருளால் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மற்றும் தஹ்ரீகே ஜதீத் திட்டத்திலும் விரிவு ஏற்படும்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் 17 அக்டோபர் 1966 ஆம் ஆண்டு அத்ஃபால் சிறுவர்களை இந்த திட்டத்தில் இணைப்பதற்காக அத்ஃபால் பதிவேட்டிற்கான அறிவிப்பினை செய்தார்கள். வக்ஃபே ஜதீது திட்டத்தின் அத்ஃபால் பதிவேட்டில் 15 வயதிற்கு கீழுள்ள அத்ஃபால் சிறுவர்களையும் நாஸிராத் சிறுமிகளையும் இணையும்படி வலியுறுத்தினார்கள். வக்ஃபே ஜதீது திட்டம் தொடர்பாக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

குழந்தைகளே ! முன்னேறுங்கள். உங்களது பெரியவர்களது கவனமின்மையின் காரணமாக வக்ஃபே ஜதீது திட்டத்தில் ஏற்பட்ட எந்த இடைவெளி உருவானதோ அதை நீங்கள் நிரப்பி விட வேண்டும். மேலும் இந்த திட்டத்தில் காணப்படுகின்ற குறைகளை நீங்கள் நீக்கி விடுங்கள். வக்ஃபே ஜதீது திட்டத்தின் ஆரம்ப காலத்தில் 10 முஅல்லிம்கள் பணியில் அமர்த்தப்பட்டனர். இந்தியாவில் 2014 ஆம் ஆண்டு வக்ஃபே ஜதீது திட்டத்தில் சந்தா செலுத்தியவர்களின் எண்ணிக்கை 83,630 ஆகும். இந்தியாவில் 2014 ஆம் ஆண்டு வக்ஃபே ஜதீது திட்டத்தில் 2,52,32,206 சந்தா வசூல் ஆனது.

2,52,32,206 ஹுஸூர் அவர்கள் 4 ஜனவரி 2008 அன்று ஆற்றிய ஜுமுஆ உரையில் கூறினார்கள்: 2007 ஆம் ஆண்டு முழு உலகிலும் வக்ஃபே ஜதீது சந்தா, தஹ்ரீகே ஜதீது சந்தாவை விட இரு மடங்கு அதிகமாக வசூலாகியுள்ளது. முழு உலக வக்ஃபே ஜதீது சந்தாவின் அடிப்படையில் 2014 ஆம் ஆண்டு இந்தியா 7 வது இடத்தை வகிக்கின்றது. வக்ஃபே ஜதீது சந்தா திட்டத்தில் சிறப்பான முறையில் பங்கு பெறுகின்ற பற்றுறுதி கொண்டவர்களும் இந்தியாவில் உள்ளனர். மேலும் அவர்கள் கட்டாயச் சந்தாவினை விகிதாச்சார அடிப்படையில் செலுத்திய பின்னரும் வக்ஃபே ஜதீது சந்தா திட்டத்தில் இலட்சக்கணக்கான ரூபாயினை சந்தாவாக கொடுக்கின்றனர்.

வக்ஃபே ஜதீது திட்டத்திற்காக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: வக்ஃபே ஜதீது சந்தா திட்டத்திற்கான பொறுப்பினை அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் மீது சுமத்துங்கள். மேலும் முதல் தரத்திலுள்ள சிறிய முஜாஹிதிற்கு 200 ரூபாயும், இரண்டாம் தரத்திலுள்ள சிறிய முஜாஹிதிற்கு 100 ரூபாயும் நிர்ணயம் செய்யுங்கள். குறிப்பாக அவர்களது பெயர் அட்டவனையினை எனக்கு அனுப்புங்கள். எஞ்சியிருக்கின்ற ஒவ்வொன்றையும் இதில் இணையுங்கள்.

வக்ஃபே ஜதீது திட்டத்திற்காக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

நீங்கள் உங்கள் நிலையை பற்றி ஆராய்ந்தவாறு உங்களில் நற்பேறு பெற்றவர்களாக இருக்கின்ற எவருக்கு இறைவன் செல்வத்தினை கொடுத்துள்ளானோ இறைவன் எந்த அளவு அவர் மீது தனது அருளை வழங்கியுள்ளானோ அந்த அளவு இறைவனது வழியில் பொருள் தியாகம் செய்கின்றாரா ? இல்லையா ? என்பதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது வார்த்தைகளில் இறுதி வேண்டுகோள் இதுவாகும்: வக்ஃபே ஜதீது சந்தா திட்டத்தினை உறுதிப்படுத்துங்கள். தைரியமாக செயல்படுங்கள். இறைவன் அதில் அருள் புரிவான். மேலும் உண்மை இஸ்லாத்தினை உலகத்தின் எல்லை வரை எட்ட வையுங்கள்... வக்ஃபே ஜதீதின் பணிகள் மகவும் விரிவடைந்து கொண்டே இருக்கின்றன. எனவே, நண்பர்களே ! இதில் இயன்ற வரை பங்கு பெற முயற்சி செய்யுங்கள். இறைவன் அதற்கான நல்வாய்ப்பினை உங்களுக்கு வழங்குவானான. இந்த பணியில் தனது அருளை வழங்குவானாக. ஆமீன்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள்**

இஸ்லாத்தின் உதவிக்காக தாராள மனப்பான்மையுடன் நீங்கள் வாரி வழங்குவீர்கள் என்றால் உங்களுக்காக இறை வல்லமையின் கை வெளிப்படும். அவனது வழியில் செலவிடுபவர் எவரும் ஏழையாகி விட மாட்டார். அவனது வழியில் செலவிட வேண்டுமென்ற உறுதியான எண்ணம் தோன்றிவிடும் என்றால் இறைவன் அவருக்கு தாமே உதவியாளனாக ஆகிவிடுகிறான். பொருளாதார கஷ்டத்தில் இருந்தும், வேறு பல கஷ்டங்களில் இருந்தும் ஈடேற்றத்தை பெறுவதற்கான வழி இறையச்சமேயாகும்... நிராகரிப்பவர்களிடமும் சொத்துக்களும் செல்வங்களும் இருந்தன. மேலும் அவர்கள் ஊதாரித்தனத்திலும், வீண் விரயத்திலும் மூழ்கிக் கிடந்தனர் என்று எவரும் கூறி விட வேண்டாம். நிச்சயமாக அவை உலகத்தின் பார்வையில் – இழிவான உலகவாதிகளின் பார்வையில் வெளிப்பகட்டுக்காக செய்பவர்களின் பார்வையில் மகிழ்ச்சிகரமானதாக தெரியும். ஆனால், உண்மையில் அவர்கள் ஒரு வகையான சோதனையிலும், கஷ்டத்திலும் மூழ்கிக் கிடந்து கொண்டிருப்பார்கள். நீங்கள் அவர்களின் தோற்றத்தினை பார்த்திருப்பீர்கள். ஆனால், நான் இவ்வாறான மக்களின் உள்ளங்களை பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் கொழுந்துவிட்டு எரிகின்ற, சுட்டெரிக்கின்ற சங்கிலிகளால் கட்டப்பட்டிருக்கின்றார்கள்.

(அல் ஹகம், தொகுதி 5 பிரதி 11 – 24 மார்ச் 1901 பக்கம் 3)

எவர் இறையச்சத்தை மேற்கொள்வாரோ அவருக்கு இறைவன் அவர் அறியாத வழி வகைகளின் மூலமாக ரிஸ்க்கினை வழங்குகின்றான். மேலும் இங்கு ரிஸ்கை பற்றி கூறக் காரணம் என்னவென்றால் பலர் ஹராமான முறையில் செல்வத்தினை சேர்த்து வைக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இறைவனின் கட்டளைகளின்படி நடப்பார்கள் என்றால், இறையச்சத்தை மேற்கொள்வார்கள் என்றால் இறைவன் கண்டிப்பாக அவருக்கு தானாகவே ரிஸ்க்கை வழங்குகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 374)

உண்மையான ரிஸ்க்கை வழங்கக் கூடியவன் இறைவனேயாவான். எவர் இறைவன் மீது முழுமையான நம்பிக்கை வைக்கின்றாரோ அவர் ஒருபோதும் ரிஸ்க்கிலிருந்து விலகி இருக்க மாட்டார். இறைவன் எல்லா வகையிலும் எல்லா இடத்திலுமிருந்து தன் மீது முழு நம்பிக்கை கொள்பவர்களுக்கு ரிஸ்க்கினை வழங்குகின்றான். இறைவன் கூறுகின்றான். எவர் என்மீது நம்பிக்கை கொள்கின்றாரோ அவருக்காக நான் வானத்தினை பொழிய வைப்பேன். பூமியை விளைய வைப்பேன். ஆகவே, ஒவ்வொவரும் இறைவன் மீது முழு

நம்பிக்கை வைக்க வேண்டும். (பத்ர் தொகுதி 6 பிரதி 19 – 38. செப்டம்பர் 1907 பக்கம் 7)

நீங்கள் இஸ்லாத்திற்காக வாரி வழங்குவீர்கள் என்றால் இறைவன் உங்களுக்காக தனது வல்லமையினை வெளிப்படுத்துவான். அவனது வழியில் பொருள் தியாகம் செய்பவர்கள் ஒருபோதும் ஏழையாகி விட மாட்டார்கள். மேலும் மன உறுதி ஏற்பட்டு விட்டால் இறைவன் தானாகவே உதவி செய்பவனாகி விடுவான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதவியாளர்களைப் பாருங்கள். அவர்கள் எந்த அளவு பாடுபட்டார்கள் ! இவ்வாறு மார்க்கப் பணிகளில் உதவுவதால் செல்வத்தின் தலையூற்று உருவாகி விடும் என்பதை உங்களுக்கு காட்டி விட்டார்கள். இது எந்த அளவு அருளுக்குரிய காலகட்டம் என்றால் நூற்றுக்கணக்கான வருடங்களாக சமுதாயங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த இறையடியார் உங்களில் இருக்கின்றார். மேலும் ஒவ்வொரு நாளும் இறைவனது புதிய இறை அறிவிப்புகள் புதிய நற்செய்திகளுடன் இறங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் தொடர்ந்து எவர் உறுதியாக இறைவழியில் தனது பிரியத்திற்குரிய செல்வத்தினை செலவிடுவாரோ அவரே இந்த ஜமாஅத்தில் சேர்ந்தவராக கருதப்படுவார்.

(மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 2 பக்கம் 613. இஷ்திஹாராத் செப்டம்பர் 1903)

இறைவழியில் செலவிடுங்கள். இது இறைவனது கட்டளையாகும் என்று மீண்டும் மீண்டும் நான் உங்களுக்கு வலியுறுத்துகிறேன். ஏனென்றால் இந்த காலகட்டத்தில் இஸ்லாம் வீழ்ச்சியின் நிலையில் உள்ளது..... எனவே, அதன் வளர்ச்சிக்காக முயற்சி செய்வது இறைவனது கட்டளை மற்றும் அவனது விருப்பத்தினை முழுமைப்படுத்துதலாகும். ஆகவே, இந்த வழியில் எதை நீங்கள் செலவு செய்தாலும் அதை இறைவன் பார்க்கக் கூடியவனாகவும், கேட்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். மேலும் எவர் இறைவனுக்காக கொடுக்கின்றாரோ அவருக்கு நான் அதிகமாக கொடுப்பேன். இவ்வுலகிலேயே அவருக்கு வாரி வழங்குவேன் என்பதும் இறைவனின் வாக்குறுதியாகும். அவர் மரணித்த பின்னர் மறுமையின் கூலியாக நிம்மதி எந்த அளவு கிடைக்கின்றது என்பதை அவர் பார்த்து விடுவார். ஆகவே, இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தனது செல்வங்களை இறைவழியில் செலவிடுங்கள் என்பதன் பக்கம் இப்போது நான் கவனமூட்டுகின்றேன். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 669)

இந்த நேரமே தொண்டு செய்வதற்கான நேரமாகும். இதற்குப் பிறகு ஒரு காலம் வரும். ஒரு தங்க மலையை இதன் வழியில் செலவு செய்தாலும் அது

இந்த சமயத்தில் செலவு செய்யப்பட்ட பைசாக்களுக்கு சமமானதாக இருக்காது.... இறைவன் தொடர்ந்து இவ்வாறு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். அதாவது எவர் தனது பிரியமான செல்வத்தை இவ்வழியில் செலவு செய்வாரோ அவரே உண்மையான முறையிலும் உறுதியான முறையிலும் இந்த ஜமாஅத்தில் இணைந்தவராக கருதப்படுவார். (மஜ்மூஆ இஷ்திஹாராத், புதிய பதிப்பு தொகுதி 2 பக்கம் 613, பிரசுரங்கள் செப்டம்பர் 1903)

ஸக்காத் கொடுக்கக் கூடியவர்கள் ஸக்காத்தினை இங்கு அனுப்ப வேண்டும். மேலும் ஒவ்வொருவரும் வீண் விரயத்திலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். இந்த வழியில் அந்தப் பணத்தை செலவிடுங்கள். எவ்வாறு இருப்பினும் நேர்மையில் நிலைத்து நில்லுங்கள். இவ்வாறு இறை அருள்களை பெறக் கூடியவர்களாக ஆவீர்கள். ஏனென்றால் இந்த அருள் எவர் இந்த ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றாரோ அவருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதாகும். (கிஷ்தி நூஹ், ரூஹானி கஸாயின் தொகுதி 19 பக்கம் 83)

நமது ஜமாஅத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் நான் எனது சந்தாவை செலுத்துவேன் என உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் எந்த நபர் அல்லாஹ்விற்காக இந்த உடன்படிக்கையை செய்கின்றாரோ அல்லாஹ் அவரது ரிஸ்கில் பரக்கத்தை வழங்குகின்றான். (மல்ஃபூஸாத், தொகுதி 3 பக்கம் 360)

## ஹஸ்ரத் நான்காவது கலீஃபாத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள்து கட்டளைகளின் ஒளியில் வக்ஃபே ஜதீத் திட்டத்தின் பின்னனி

### தர்பிய்யத் குறைபாடு மற்றும் நல்லொழுக்க வீழ்ச்சி

வக்ஃபே ஜதீத் திட்டத்தின் ஒரு நோக்கம் தர்பிய்யத் குறைபாடு மற்றும் நல்லொழுக்க வீழ்ச்சியின் வேகம் பல காரணங்களால் இந்தியா மற்றும் பாகிஸ்தான் பிரிவினைக்கு பிறகு அபாய நிலையை அடைந்து விட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இறைவன் அவர்களுக்கு வழங்கியிருந்த தொலைநோக்கு பார்வை மூலமாக இந்த அபாயத்தை உணர்ந்திருந்தார்கள். மேலும் அதனை சரியான நேரத்தில் தடுத்து நிறுத்தாமல் இருந்திருந்தால் அது கட்டுக்கடங்காத கொடூரமான தோற்றத்தினை காட்டியிருக்கும். இஸ்லாத்தை வெளிநாடுகளில் மற்றும் மாற்று மதத்தவர்கள் மத்தியில் பரப்புவதில் நாம் வெற்றி காண்பதற்கு முன்பு இதை அயாயமானது மறுபடியும் புதிய வழிகாட்டுதலுக்கு தேவையுடையவர்களாக நம்மை ஆக்கி இருக்கும்.

இவ்வாறான நிலையில் நாம் எவர்களை நேர்வழியின் பக்கம் அழைப்போமோ அவர்கள் நமது தூதுச் செய்தியினை பொருட்டாக கருதாமல் தூர நீக்கி விட்டு (அதாவது வைத்தியரே முதலில் நீங்கள் உங்களுக்கு வைத்தியம் செய்யுங்கள்) என்று இழிவாக நம்மை நோக்கி கூறக்கூடும். (ஸவானிஹ் ஃபஸ்லே உமர், தொகுதி 3 பக்கம் 349)

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு விருப்பம்

இரண்டாவது பின்னனி, உடனடியாக நிறைவேற்ற வேண்டிய இந்த அதிக தேவையுள்ள காலத்திறகு முன்பு உள்ளதாகும். அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு விருப்பத்தோடு தொடர்புள்ளதாகும். மேலும் கீழ்க்கண்ட வார்த்தைகளால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வக்ஃபே ஜதீது திட்டத்தினைப் போன்ற ஒரு திட்டத்தினை இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளில் நிறுவ வேண்டும் என்று விரும்பியது தெள்ளத் தெளிவாக வெளிப்படுகின்றது.

ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இந்த எளியவனின் விருப்பமும் என்னவென்றால் இஸ்லாத்தினை பரப்புவதற்காக இந்தியா போன்ற நாடுகளில் நமது ஜமாஅத்தின் சார்பில் பிரசாரகர்கள் மற்றும் விவாதம் செய்யக் கூடியவர்கள் நியமனம் செய்யப்படுகின்ற அழகிய ஒரு திட்டம் இருக்க வேண்டும். இவ்வாறு இறையடியார்களை உண்மை இஸ்லாத்தின் பக்கம் அழைத்து முழு உலகிலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்றடைவது முழுமை பெறட்டுமாக. ஆனால், வலுவிழந்த, குறைவாக இருக்கக்கூடிய இந்த ஜமாஅத்தால் இப்போது இந்த எண்ணம் முழுமை பெற முடியாது. (நிஷானே ஆஸ்மானி ரூஹானி கஸாயின் தொகுதி 4)

மேலும் இன்னோர் இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதன் அடிப்படையில் பார்ப்போம் என்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு விருப்பத்தின் நிறைவேற்றும் விதத்தில் வக்ஃபே ஜதீது நிறுவப்பட்டது என்று கூற முடியும். இதன் பக்கம் விருப்பங்கள் எழுதல் மற்றும் கவனம் செலுத்தப்படுதல் இறைவனின் எண்ணத்திற்கு மற்றும் இறைவனின் நுட்பத்திலும் நுட்பமான ஞானத்திற்கு ஏற்பவே ஆகும். ஆகவே, ஒரு பக்கம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு 80 வருடங்களுக்கு முன்பு உள்ளத்தில் அதற்காக விருப்பம் எழுவதும் மறுபக்கம் நமது கண்களுக்கு முன்னால் வக்ஃபே ஜதீது திட்டம் தோன்றப்பட வேண்டும் என்பதை மிகவும் எதிர்பார்த்தவாறு அவை இந்த

திட்டம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது. (ஸவானிஹ் ஃபஸ்லே உமர், தொகுதி 3 பக்கம் 349)

**வக்ஃபே ஜதீத் பற்றி சிறிய அறிமுகம்**

வக்ஃபே ஜதீத் திட்டத்தினை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 27 டிசம்பர் 1957 ஆம் ஆண்டு ஆண்டு மாநாட்டின் போது நிறுவினார்கள். அதன் ஆரம்ப கால உறுப்பினர்களை அன்னார் நியமித்தார்கள். என்னைத் தவிர ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அஹ்மது மஸ்ஹர் சாஹிப் அவர்களுடைய பெயரும் இருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் உறுப்பினரின் அடிப்படையில் என்னுடைய பெயரை முதலாவது உறுப்பினராக வைத்தார்கள். ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அஹ்மது மஸ்ஹர் சாஹிப் இரண்டாவது உறுப்பினராக வைக்கப்பட்டார்கள். ஆனால், வக்ஃபே ஜதீத் திட்டத்தின் மஜ்லிஸின் தலைமைப் பெறுப்பை ஹஸ்ரத் ஷேக் முஹம்மது அஹ்மது மஸ்ஹர் சாஹிப் அவர்களே, தான் மரணிக்கும் வரை வகித்தார்கள். ஹஸ்ரத் மவ்லானா அபுல் முனீர் நூருல் ஹக் சாஹிப் அவர்களின் பெயரும், ஹஸ்ரம் மவ்லவி அபுல் அதா சாஹிப் அவர்களின் பெயரும், ஹஸ்ரத் ஸைஃபுர் ரஹ்மான் சாஹிப் அவர்களின் பெயரும் இருந்தது. மேலும் இரண்டு நபர்களுடைய பெயரையும் சேர்த்து மொத்தம் ஏழு நபர்களுடன் இந்த திட்டத்திற்கான அறிவிப்பு தொடங்கப்பட்டது.

மேலும் அதன் ஆரம்ப கால வாக்குறுதிகளும் எனக்கு நினைவு இருக்கின்றது. அதாவது அந்த ஆண்டிற்கான பட்ஜெட் 70 அல்லது 72 ஆயிரம் ரூபாய்களாகும். பின்னர் இறைவன் அதில் தனது அருளை செய்தான். அந்த நிலையில் தொடங்கிய பின்னர் இன்று இதன் நிலைமையே மாறி விட்டது. அஹ்மதி குழந்தைகளிடம் இந்த திட்டத்தின் நேசத்தினை சிறு வயதில் இருந்தே ஏற்படுத்துவதற்காக ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் 1966 ஆம் ஆண்டு வக்ஃபே ஜதீது திட்டத்தில் சிறுவர்களுக்கான பதிவேட்டை நிறுவினார்கள். ஆரம்பத்தில் இந்த திட்டம் இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு மட்டும் இருந்தது. பின்னர் இந்த திட்டம் 25 டிசம்பர் 1985 ஆம் ஆண்டு முழு உலக அளவில் விரிவுபடுத்தப்பட்டது. இப்போது இந்த திட்டம் முழு உலக அளவில் 110 நாடுகளுக்கு மேல் தொடங்கப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் ஆயிரத்தில் இருந்த தொகைகள் இப்போது இலட்சக்கணக்கிலும், இலட்சக்கணக்கில் இருந்த தொகை இப்போது கோடிக்கணக்கிலும் பெருகி விட்டது. ஆரம்பத்தில் வக்ஃபே ஜதீது பொருள் தியாகத் திட்டத்தில் இணைக்கப்படாமல் இருந்த சமுதாயங்கள் அதாவது ஐரோப்பா மற்றும் ஏனைய மேற்கத்திய சமுதயாங்கள்

அமெரிக்கா, கனடா போன்ற மேற்கத்திய நாடுகளிலுள்ள இப்போது இதில் இணைக்கப்பட்டு விட்டன. (வக்ஃபே ஜதீது குத்பாக்கள் பக்கம் 435, 507)

**கண்ணியத்திற்குரிய கலீஃபாக்களின் கட்டளைகளின் ஒளியில்**
**வக்ஃபே ஜதீது திட்டத்தின் முக்கியத்தும் மற்றும் அதன் அருள்கள்**

**எனது வீட்டை விற்க வேண்டியது வந்தாலும், ஆடைகளை விற்க வேண்டியது வந்தாலும் நான் இந்த கட்டளையை நிறைவேற்றுவேன்.**

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இது இறைவனுடைய பணியாகும். அவன் இதனை நிறைவேற்றியே தீருவான். ஏனென்றால் இறைவன் இந்த திட்டத்தினை எனது உள்ளத்தில் இட்டுள்ளான். ஆகவே, இதற்காக என்னுடைய வீட்டினை விற்க நேரிட்டாலும், என்னுடைய துணிமணிகளை விற்க நேரிட்டாலும் நான் இந்த கடமையினை அந்த தருணத்திலும் நிறைவு செய்வேன். மேலும் ஜமாஅத்தினுடைய ஒரு நபர் கூட இதற்காக என்னுடன் இல்லை என்றாலும் என்னுடன் சேராத ஒவ்வொருவரையும் இறைவன் தனியாக பிரித்து விடுவான். மேலும் என்னுடைய உதவிக்காக வானவர்களை வானத்திலிருந்து இறக்குவான். ஆகவே, நான் அத்தாட்சிகளை நிறைவு செய்தவாறு பொருள் தியாகத்தின் பக்கம் மக்களின் கவனம் இருக்க வேண்டும் என்பதற்கான மீண்டும் ஒரு முறை நான் அறிவிப்பு செய்கின்றேன். (பைகாம் ரகம் ஃபர்முதா 5 ஜனவரி 1957. மத்பூஆ குத்பாத் வக்ஃபே ஜதீத், பக்கம் 3)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வக்ஃபே ஜதீத் திட்டத்தின் ஐந்தாவது வருடத்திற்கான தொடக்கத்தில் ஆன்மாவிற்கு எழுச்சியூட்டக்கூடிய தூதுச் செய்தியை வழங்கியவாறு இவ்வாறு கூறுகிறார்கள்: இந்த (வக்ஃபே ஜதீத் திட்டம்) சந்தா எந்த அளவு வலுப்பெறுமோ அந்த அளவு இறை அருளால் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா மற்றும் தஹ்ரீகே ஜதீத் திட்டத்திலும் விரிவு ஏற்படும்.

(3 ஜனவரி 1964. மத்பூஆத்தே குத்பாத்தே வக்ஃபே ஜதீது பக்கம் 61)

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் கூறுகின்றார்கள்: ஆகவே, முன்னேருங்கள். வக்ஃபே ஜதீது திட்டத்தின் புதிய ஆண்டில் அதிகமதிகமாக வாக்குறுதி அளியுங்கள். மேலும் எவர் இந்த பொருள் தியாக ஜஹாதில் இதுவரை பங்கு கொள்ளவில்லையோ அவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வக்ஃபே ஜதீது திட்டத்தை பற்றி கூறிய கூற்றினை அதாவது என்னுடைய வீட்டினை விற்க நேரிட்டாலும், என்னுடைய துணிமணிகளை விற்க நேரிட்டாலும் நான் இந்த கடமையினை அந்த தருணத்திலும் நிறைவு செய்வேன் என்பதை தன் கண்முன் வைக்க வேண்டும்

என்பதை நினைவுபடுத்துங்கள். (மத்பூஆத்தே குத்பாத்தே வக்ஃபே ஜதீது பக்கம் 102, 103)

**வானத்தின் குரலை கேளுங்கள். வக்ஃபே ஜதீத் திட்டத்தினை வலுவாக்குங்கள்**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் நீங்கள் வக்ஃபே ஜதீது திட்டத்தினை உறுதி வாய்ந்ததாக ஆக்குவது அவசியமாகும் என்று அறிவுறுத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால் இப்போது அதன் பணி விரிவடைந்து இருப்பதால் அதன் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகி விட்டது. ஆகவே, இறைவன் உங்களுக்கு எங்கு செல்வத்தின் அபிவிருத்தியினை வழங்கியுள்ளானோ அங்கு நீங்கள் முழு மனதுடன் இந்த ஜமாஅத்தின் வளர்ச்சிப் பணிகளுக்காக சந்தாக்கள் வழங்க வேண்டும். காலத்தின் குரலை கேட்பதற்கான நல்வாய்ப்பினை இறைவன் உங்களுக்கு வழங்குவானாக. நீங்கள் வானத்தின் குரலை கேட்கக் கூடியவர்களாக ஆவீர்களாக. இறைவன் அவ்வாறே செய்வானாக. மேலும் பூமியின் குரலை கேட்கக் கூடியவர்களாக ஆவீர்களாக. இவ்வாறு உங்களுக்கு தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய வெற்றி கிடைக்கட்டுமாக.

(அல் ஃபஸ்ல் 31 டிசம்பர் 1959, மத்பூஆ ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் அறிமுகம் பக்கம் 454, இணையதள பதிப்பு)

**வக்ஃபே ஜதீது திட்டத்தில் பங்கு பெறுங்கள்**

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் கூறுகின்றார்கள்:

காலத்தின் இமாமுடைய பணி ஜமாஅத்தின் முன் ஆலோசனைகளை வைப்பதாகும். அந்த ஆலோசனைகளை செயல் வடிவில் கொண்டு வருவது ஜமாஅத்தின் பணியாகும். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மூளையில் எந்நேரமும் சிந்தித்துக் கொண்டே தான் இருக்கும். மேலும் ஹுஸூர் அவர்கள் பணிகளை சிறந்த முறையில் நடத்தவும், அவற்றை முன்னேற்றவும் புத்தம்புது சிந்தனைகளை ஜமாஅத்திற்கு முன் எடுத்து வைப்பார்கள். மேலும் அவற்றிற்கு செயல் வடிவம் கொடுக்கும் அளவிற்கு ஜமாஅத்தினை ஆயத்தம் செய்தார்கள். ஜமாஅத் தஃலீம், தர்பிய்யத் மற்றும் வெளியீட்டுப் பணிகளின் அடிப்படையில் தனது கடமைகளை நிறைவேற்றவில்லை என்று ஹுஸூர் அவர்கள் பார்த்த போது நான் இவர்களின் குறைகளை மறைப்பேன் என்றால் இறைவனும் இவர்களது குறைகளை மறைப்பான் என்ற சிந்தனையின் அடிப்படையில் ஜமாஅத்தினுடைய இந்த குறைபாட்டினை பற்றி எச்சரிக்காமல் வக்ஃபே ஜதீது என்ற புதிய திட்டத்தினை

நிறுவி விட்டார்கள். அதற்கு மிக நல்ல விளைவுகள் கிடைத்தன. (1965 ஜல்ஸா சாலான சொற்பொழிவு. மத்பூஆ குத்பாத்தே வக்ஃபே ஜதீது பக்கம் 71)

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் கூறுகின்றார்கள்:

நம்முடைய ஜமாஅத்தில் எந்த திட்டம் நிறுவப்பட்டாலும் அதன் உண்மையான நோக்கம் இறைஞானத்தைப் பெறுதல் மற்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தினை உலகில் நிலைநாட்டுவதும் ஆகும். இவ்வாறான திட்டங்களில் ஒன்று தான் வக்ஃபே ஜதீதின் திட்டமுமாகும்.

(அல் ஃபஸ்ல் 14 ஜனவரி 1978. மத்பூஆ குத்பாத்தே வக்ஃபே ஜதீத் பக்கம் 184)

**வக்ஃபே ஜதீது திட்டத்திற்கு உயிரூட்டுங்கள்**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹு தஆலா அவர்கள் தாம் கலீஃபாவாக ஆவதற்கு முன்பு 1960 ஆம் ஆண்டு ரப்வாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் இவ்வாறு கூறினார்கள்:

ஆகவே, வக்ஃபே ஜதீது திட்டத்தினை உயிரூட்டுங்கள். அதனை நிலைநாட்டுங்கள் என்று நான் மீண்டும் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். இதன் நாளங்களில் உங்களுடைய தியாகத்தின் குருதியை நிரப்புங்கள். இவ்வாறு இஸ்லாத்தின் நாளங்களில் புதிய உயிரூட்டுக்கூடிய புதிய நம்பிக்கையுடன் நிரம்பி குருதி ஓடட்டுமாக.

இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் உங்களையே சார்ந்துள்ளன. இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் உங்களையே சார்ந்துள்ளன. இன்று உங்களின் மூலமாகவே இஸ்லாம் உயிர் பெற இருக்கின்றது. மேலும் உங்களைத்தவிர மற்றவர்கள் அனைவரும் இருளில் இருக்கின்றனர். நீங்கள் உங்கள் மீது இருளை சூழ வைத்து விடாதீர்கள். உயிரோடு இருங்கள். விழிப்புணர்வோடு இருங்கள். இந்த திட்டத்தையும் உயிருடன் வைத்திருங்கள். மேலும் இதன் நாளங்களில் உங்களுடைய தியாகத்தின் குருதியை நிரப்புங்கள். இவ்வாறு இஸ்லாத்தின் நாளங்களில் புதிய உயிரூட்டுக்கூடிய புதிய நம்பிக்கையுடன் நிரம்பி குருதி ஓடட்டுமாக.

(1960 ஆம் ஆண்டு ரப்வாவில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் வக்ஃபே ஜதீதின் முக்கியத்துவம் தொடர்பாக ஆற்றிய சொற்பொழிவு – தான் கலீஃபாவாக ஆவதற்கு முன்னர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் ஆற்றிய உரைகள் குத்பாத்தே தாஹிர் பக்கம் 15)

## இந்த சமுதாயத்தை ஒருபோதும் எவரும் கீழிறக்கி விட முடியாது

சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் புதிதாக பைஅத் செய்தவர்களை பொருள் தியாகத்தில் கலந்து கொள்ள வைக்கும் நோக்கத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

புதிதாக பைஅத் செய்தவர்களிடமும், புதிதாக பைஅத் செய்தவர்களை பாதுகாக்கக் கூடியவர்களிடனும் நாம் கூற விரும்புவது என்னவென்றால், புதிதாக பைஅத் செய்தவர்கள் பொருள் தியாகத்தில் கலந்து கொள்ளும் போது தான் ஜமாஅத்துடன் அவர்களுக்கு உறுதியான தொடர்பு ஏற்படுகின்றது. அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்கான வழி பொருள் தியாகம் செய்வது தான் என்ற அடிப்படையான விஷயத்தை அவர்கள் புரிந்து கொள்கின்றனர். அல்லாஹ்வின் அருளால் புதிதாக பைஅத் செய்தவர்களில் எவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொண்டார்களோ அவர்கள் ஜமாஅத்துடன் உள்ள தொடர்பு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் உள்ள அன்பு, கலப்பற்ற தொடர்பு மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பில் தன்னை மாய்த்துக் கொள்ளும் படித்தரங்களை விரைவாக அவர்கள் கடந்து சென்று கொண்டிருக்கின்றனர். புதிதாக பைஅத் செய்த சிலர் பொருள் தியாகத்தில் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றனர். அதற்குப் பிறகும் நாங்கள் இந்த தியாகங்களைச் செய்திருக்கின்றோம். ஆயினும் எதுவும் செய்யவில்லை என்ற ஏக்கம் இருக்கிறது என எழுதுகின்றனர்.... ஆக, இதுதான் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கிய, வழங்கிக் கொண்டிருக்கின்ற முத்துக்களும், வைரங்களும் ஆகும். அவர்களின் ஏக்கங்கள் உலக ஆசைகளில் இல்லை. மாறாக, தியாகங்களில் முன்னேறுவதில் இருக்கிறது. மேலும் எந்த சமுதாயங்களின் ஏக்கங்கள் இதன் பக்கம் திரும்பி இருக்கின்றனவோ அந்த சமுதயாத்தை எவரும் ஒருபோதும் கீழிறக்கி விட முடியாது. அல்லாஹ்வின் வாக்குறுதிகளும்

அத்துடன் இருக்கின்றன. மேலும் அல்லாஹ், நான் உம்முடனும் உமது அன்பிற்குரியவர்களுடனும் இருக்கிறேன் என்ற அறிவிப்பையும் செய்துள்ளான். (குத்பா பேருரை 4.1.2008)

## நாம் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள் ?

அல்லாஹ் எத்தகைய இமாமை வழங்கியிருக்கிறான் என்றால் அவர்கள் நமக்கு இறைவனை சந்திப்பதற்கான வழியை ஒளிமயமாக்கித் தந்திருக்கிறார்கள். நாம் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாவோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைகளின் உண்மையான ஆன்மாவை அவர்கள் நம்மிடம் உருவாக்கினார்கள். அவர்கள் நம்மிடம் திருக்குர்ஆனின் அழகிய போதனையைப் புரியும் திறனையும், அறிவையும் உருவாக்கி இருக்கிறார்கள். அதன்படி நடந்து நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறோம். நாம் கண்டிருப்பதைப் போன்று அல்லாஹ் நம்மிடம் பொருள் தியாகத்தையும் தனது திருப்தியைப் பெறுவதற்கான வழிவகையாக ஆக்கியிருக்கிறான். அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உலகின் ஒவ்வொரு நபர் வரை எட்டச் செய்யும் பணி சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காகவும், ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும் இதை நன்றாக நிறைவு செய்ய வேண்டும் என்பதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு கலீஃபாக்களும் இதன் பக்கம் ஜமாஅத்திற்கு கவனமூட்டிக் கொண்டிருக்கிறார்கள். கவனமூட்டிக் கொண்டும் இருப்பார்கள். ஏனெனில் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுதவற்கான இறைவணக்கங்களுடன் எல்லா விதமான தியாகங்கள் பற்றி குறிப்பும் உள்ளது. அவற்றில் ஒன்று பொருள் தியாகமுமாகும்.

(ஜுமுஆ பேருரை 4.1.2008)